பக்கங்கள்-16 10.ஐப்பசி.2021 விலை-30.00

பாபு தையல் இயந்திரம் திருத்துமிடம்

0776906182

# தினப்புயல்

PIN news
THINAPPUYAL
තිනප්පුයල්
REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06



T.P- 0770457661

மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் -359

# களமுனை கதாநாயகன் கருணா அம்மானை களமிறக்கப்போகும் இந்தியாவும் அமெரிக்காவும்

-ஆய்வு களம்-



# உயிரிலும் மேலான அல்லாஹ்வை அவமதித்தாலும் அரசாங்கத்திற்கே வால் பிடிப்போம் - சாணக்கியன் வாய் திறக்கக்கூடாது



# அரசியலில் இரட்டை வேடம் போடும் தமிழ் தேசிய மக்கள் முன்னணி

# களமுனை கதாநாயகன் கருணா அம்மானை களமிறக்கப்போகும் இந்தியாவும் அமெரிக்காவும் – இலங்கை அரசுக்கு பேராபத்து



இன்றைய பூகோள அரசியல் சூழ்நிலையில் சீனாவின் ஆக்கி ரமிப்பு என்பது இலங்கையை பொறுத்தவரையில்நீண்டகாலஒரு உத்தியாகவே அமைந்துள்ளது. குறிப்பாக அம்பாந்தோட்டை துறை முகம், போர்ட்சிற்றி, தாமரைத்த டாகம் இன்னும் இலங்கையில் பல பாகங்கள் இரகசிய ஒப்பந்த அடிப்படையில் கையளிக்கப் பட்டுள்ள நிலையில் ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் அமெரிக்கா, இந்தியா எதிர்நோக்கியுள்ள பிரச்சனைகளை அடியோடு இல்லாதொழிக்க வேண்டுமாக இருந்தால் முன்னாள் தமிழீழ விடுதலைப்புலிகளின் இராணுவ கட்டளைத்தளபதி கருணா அம்மானை போர்க்களத்தில் களமிறக்குவதனூ டாக இவ் விடயம் சாத்தியப்படும் என்னுமொரு நிலைப்பாட்டை இந்தியா அமெரிக்க புலனாய்வுகள் அலசி ஆராய்ந்து வந்த நிலையில் தற்போதைய சூழ்நிலையில் அது சாத்தியமாக உள்ளதாக அமெரிக்க புலனாய்வு செய்திகள் மற்றும் இந்திய புலனாய்வு செய்திகள் இரகசியமாக கலந்துரையாடி யிருப்பதாக தகவல்கள் கசிந் துள்ளன.

இவற்றை அடியொட்டி பார்க்கும் பொழுது தமிழீழ விடுதலை ப்புலிகள் வடகிழக்கை ஆக்கிர மித்த நிலையில் சர்வதேச நாடு களின் தலையீடு இல்லாதிருந்த நிலையில் தற்பொழுது அது மீண்டும் இலங்கையில் தலை விரித்தாடுகின்றது. இதனால் இந்தியா அமெரிக்கா போரியல் ரீதியிலும் அரசியல் ரீதியிலும் எதிர்நோக்கும் பிரச்சனைகள் ஏராளம்.

ஆகவே ஆயுத உதவிகளையும் பண உதவிகளையும் மருத்துவ உதவிகளையும் நவீன தொழினு ட்பங்களையும்விடுதலைப்புலிகளின் முன்னாள் இராணுவ கட்டளைத் தளபதி கருணா அம்மானுக்கு வழங்குவதனூடாக ஒரு இராணுவ கட்டமைப்பை உருவா க்கி சர்வதேச ரீதியாக சீன அரசி ற்கும் இலங்கை அரசிற்கும் பாரிய பின்னடைவை எதிர்நோக்கும் ஒரு சவாலாக இதனை இந்தியா அமெரிக்கா நடைமுறைப்படுத்து வதற்கு தீவிரம் காட்டிவருகின்றது. விடுதலைப்புலிகளின் போராட்டத் தை முற்றாக இல்லாதொழித் ததன் விளைவு சர்வதேச நாடு களின் விளையாட்டு அரங்கமாக இலங்கை மாறியுள்ளது. போரியல் வரலாற்றில் 30 ஆண்டுகால அனுபவத்தை கொண்ட கருணா அம்மான் அவர்கள் தற்பொழுது அரசின் அடிவருடியாக செயற்பட்டு வருகி ன்றார் என்பது பலருடைய நிலை ப்பாடு. அது மட்டுமன்றி ஒரு போர் வீரனை குடிப்பழக்கத் திற்கும் பெண் அடிமைக்கும் உள்ளாக்கி அவரது போர் தந்திர உபாதைகளை மலுங்கடிக்க விட்டதாக அரசாங்கம் எண்ணி க்கொண்டிருக்கும் இந் நிலையில் இவ்வாறான செய்திகள் கசிந் துள்ளது என்பது அரச புலனா ய்வாளர்களுக்கு பேர் அதிர்ச் சியை கொடுத்துள்ளது. எவ்வாறு விடுதலைப்புலிகளின் ஆயுத விநியோகஸ்தர் K.P என அழை க்கப்படும் குமரன் பத்மநாதன் அரசாங்கத்தின் தீவிர பாதுகாப்பில் இருந்துவருகின்றார். பிள்ளை யானை பொருத்தவரையில் அவ்வாறான செயற்பாடுகளுக் கு பொருத்தமற்றவர். கருணா அம்மானை பொருத்தவரையில் அதற்கான வழங்கல் வழங்கப் படும் பொழுது கச்சிதமாக ஒரு காரியத்தை முடிப்பதில் தலை சிறந்தவராகவே விளங்குகின்றார்.

ஆகவே அவரை கண்காணித்து வரும் இலங்கை அரசு ஏதோ ஒருவகையில் அவரை கொலை செய்யவும் முயற்சிக்கும். இவ்வாறு செய்துவிட்டு முன்னாள் போராளிகள் மீது கொலை குற்ற த்தை சுமத்தவும் முடியும். அல்லது பிள்ளையான் குழுவை வைத்து கருணா அம்மானை கொலை செய்வதற்கு திட்டங்களையும் வகுக்ககூடும். ஆனாலும் பாம்பின் காலை பாம்பு அறியும் என்பதுமாப் போல் ஆயுத போராட்ட கட்சிகளின தும் ஆயுத தாரிகளைப்பற்றியும் கருணா அம்மான் நன்கு அறிந்து வைத்துள்ளார்.

ஆகவே தான் அவர் பல்வேறு உயிராபத்துக்களில் இருந்து தன்னை இதுவரையிலும் பாதுகா த்துள்ளார். இன்றைய பூகோள அரசியலில் அமெரிக்காவிற்கும் இந்தியாவிற்கும் தேவைப்படுவது சீனாவினுடைய இலங்கைக்கான தலையீடு என்பது முற்றாக இல்லாதொழிக்கப்பட வேண்டும் என்பதே. அவ்வாறு இருந்தால் தான் 13ஆம் திருத்த சட்டத்தை இலங்கையில் நடைமுறைப்படுத்தி அதில் தான் குளிர்காய முடியும் என்பதேயாகும். பல ஆண்டு காலமாக இலங்கையானது இந்தியாவின் நட்புறவு நாடாகவே அமைந்துள்ளது. இந்தியாவின் புலனாய்வாளராக செயற்படும் சுப்ரமணியம் சுவாமி மகிந்த ராஜபக்சவின் நெருங்கிய நண்பர். அவர் ஊடாகவே இலங்கைக்கான காய் நகர்த்தல்கள் நகர்த்தப்பட்டு வருகின்றது.

இருந்தாலும் சீனாவால் தமக்கு நன்மை கிடைப்பதாக இலங்கை அரசு கருதுகின்றது. பல்வேறு நாடுகளில் சதி புரட்சியை ஏற்படுத்திய அமெரிக்காவும் இந்தியாவும் தற்பொழுது சீனாவை நேரடியாக எதிர்க்க முடியாத போதிலும் இலங்கையில் ஒரு ஆயுத குழுவை உருவாக்கி அந்த ஆயுத குழுவினூடாக இலங்கை அரசிற்கு தகுந்த பாடம் புகட்டுவதற்கே தற்பொழுது இவர்களின் நடவடிக்கைகள் ஆராயப்பட்டுவருவது மட்டுமன்றி அதற்கு தகுதியான ஒருவர் என்ற அடிப்படையில் முன்னாள் விடுதலைப்புலிகளின் இராணுவ கட்டளைத்தளபதி கருணா அம்மானை தேர்வு செய்திருக்கி ன்றது.

விடுதலைப் போராட்டமானது மலுங்கடிக்கப்படுவதற்கு இலங்கை அரசாங்கத்திற்கு பாரிய ஒத்துழைப்பு வழங்கியதாக கம்பன்வில தெரிவித்திருந்தார். இலங்கை அரசாங்கம் விடுதலை ப்புலிகளை அழித்தொழிப்பதற்கு அதன் போர் தந்திரோபாயங்களை காட்டி கொடுப்பது மட்டுமன்றி விடுதலைப்புலிகளின் முக்கிய மான தளபதிகளையும் சுட்டுக் கொல்வதற்கும் கருணா அம்மான் காரணமாகவும் இருந்தார்.

ஆகவேஅமெரிக்கஇந்தியஅரசியல் இராஜதந்திர நகர்வுகளை புரிந்து கொல்லாத வகையில் செயற்படுவ தனுடைய அடுத்தகட்ட விளைவு என்னவென்று இலங்கை அரசு தெரியாமல் திண்டாடுகின்றது. மீண்டும் இந்த நாட்டில் ஒரு இரத்த களரியை உருவாக்குவதற்கு இலங்கை அரசு இடமளிக்கப் போகின்றதா? மறுபுறத்தில் முஸ்லிம் மக்களையும் அரசியல் வாதிகளையும் அடக்கி ஒடுக்குவ தன் ஊடாக ஐஎஸ் ஐஎஸ் தீவிர வாதிகளினுடைய தாக்குதலுக்கும் இலக்காகும் அபாய நிலை தோற்றுவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் இன்று அனைவராலும் செல்லாக்காசாக பார்க்கப்படுகின்ற முன்னாள் தமிழீழ விடுதலை ப்புலிகளின் இராணுவ கட்டளைத் தளபதி கருணா அம்மான் அவர் களின் சுயரூபம் என்னவென்று வெளிப்படும் நிலையில் இலங்கை அரசு பாரிய பின்னடைவுகளை சந்திக்க நேரிடும் என்பதில் மாற்றுக்கருத்தில்லை. ஆகவே இலங்கை அரசு பூகோள ரீதியி லான பிரச்சனைகளை விரை ந்து அணுகி அதற்கான தீர்வுக ளை முன்னெடுக்கும் வகையில் இவ்வாறான ஆபத்துக்களில் இருந்து எமது நாட்டை பாதுகாத்துக் கொள்ள முடியும் என்பதே இக் கட்டுரையின் பிரதான நோக்கம்.

**இரணியன்**

தினப்புயல்
ஆசிரியர்பீடம்
இல : 154, 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை,வவுனியா.

## இனவாத மதவாத அரசியல் நடப்பது என்ன?

இலங்கைஅரசைபொறுத்தவரையில்தமிழ் மக்களுக்கான தீர்வை பெற்றுக்கொடுக்கும் எண்ணம் அறவே இல்லை. காரணம் வில்லியம் கொப்பலாவ தொடக்கம் கோட்டபாய ராஜபக்ச வரை இனவாத மதவாத அரசியலையே மேற்கொண்டு வந்தனர். தமிழர்கள் செறிந்து வாழுகின்ற வடகிழக்கு மாகாணங்களை ஒன்றிணைத்து வாழக்கூடாது என்பதில் இவர்கள் மிகவும் தெளிவாக செயற்பட்டவர்கள். இணைந்த வடகிழக்கை பிரித்தாளும் இராஜதந்திரத்தை கொண்டு ஜேவிபியை வைத்து மகிந்த ராஜபக்ச அரசாங்கமே இரு கூறுகளாக்கியது. மதவாதம் இனவாதம் இரண்டு அரசியலையும் செய்து வரும் அதேநேரம் சிங்கள மக்கள் மத்தியில் இதுவொரு பௌத்த நாடு எனவே இங்கு சிறுபான்மையினராகிய முஸ்லிம்களுக்கும் தமிழர்களுக்கும் இடமில்லை என்ற பிரச்சாரத்தை முன்வைக்கின்றது.

மறுபக்கத்தில் தமிழர்களையும் முஸ்லிம்களையும் மலையக தமிழர்களையும் பிரித்தாளும் இராஜ தந்திரமாக தோட்ட தொழிலாளிகள் மத்தியில் சம்பள பிரச்சனையையும் முஸ்லிம் மத்தியில் இவர்களுக்கான தனிஅலகு இல்லை எனவும் தமிழர்கள் மத்தியில் வடகிழக்கிணைந்த தமிழர் தாயகத்தை வழங்க முடியாது என்ற நிலைப்பாடுகளையும் முன்வைத்து பிரிவினைவாதத்தை தொடர்ந்தும் முன்னெடுத்து வருகின்றார்கள். இன்றைய நவீன யுகத்தில் துட்டகைமுனு என அழைக்கப்படுகின்ற ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ச அவர்கள் ஜனாதிபதி அதிகாரத்தை வைத்து துஸ்பிரயோகம் செய்துவருகின்றார் என்று எதிர்க்கட்சியும் ஏனைய கட்சி தலைவர்களும் குற்றம் சுமத்திவருகின்ற அதே நேரம் ஆட்சி மாற்றம் ஒன்றை கொண்டு வருவதற்கும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றார்கள். மன்னாரில் கிறிஸ்தவ மதவாதத்தையும் களுத்துறையில் பௌத்த மதவாதத்தையும் காத்தான்குடியில் முஸ்லிம் மதவாதத்தையும் தொடர்ந்து வந்த அரசாங்கங்களும் மேற்கொண்டு வருகின்றார்கள். கடந்த 30 ஆண்டுகாலங்கள் முஸ்லிம்களுக்கு மதவாத பிரச்சனை இந்த நாட்டில் இருக்கவில்லை ஆனால் இலங்கையில் இடம்பெற்ற ஈஸ்டர் குண்டுத்தாக்குதலின் பின்னரே முஸ்லிம்களுக்கான அகிம்சைகள் தற்பொழுது தொடர்கின்றன. ஆயுத போராட்டம் நிறைவுக்கு வந்த அதேநேரம் மதவாத போர் என்பது சர்வதேச நாடுகளின் உதவிகளையும் அனுகியே அது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

ஆகவே அரசாங்கம் என்பது பொறுப்புணர்வுடன் செயற்பட வேண்டும். மதவாத இனவாத அரசியலை இலங்கையில் தலைதூக்கவிடாது அதற்கான ஒரு தீர்வை நோக்கி அரசாங்கம் பயணித்தால் இந் நாட்டில் மக்கள் அனைவரும் நிம்மதியாக வாழக்கூடிய சூழல் உருவாக்கப்படும் இல்லையேல் இரத்த ஆறு ஓடுவதை எவராலும் தடுக்கமுடியாது.

# 163 உலக வரலாற்றில் குறுஞ்சமர்

### திடீர்த்தாக்குதல்

திடீர்த்தாக்குதல் மேற்கொள்கின்ற குழுவின் அனுகூலமான ஆளணி எண்ணிக்கை 30 - 35 பேராகும். இக்குழு பின்வரும் உபகுழுக்களாகப்பிரிக்கப்படுகின்றது. பொறியியலாளர் உபகுழு (கண்ணி, முட்கம்பித் தடைகளினூடாக நர்வுப்பாதையை உருவாக்குதல், சமிக்கை அமைப்புக்களை நிறுத்துதல் போன்ற பணிகள்), அடக்கும் உபகுழு (இலக்கின் காவலாளர்களைச் சாத்தியத்தைப் பொறுத்துச் சந்தடியின்றிக் கொல்லுதல்), பிரதான உபகுழு (சூட்டாயுதங்களின் சூடுகளாலும் வெடிபொருட்களாலும் ஏனைய கருவிகளாலும் தாக்குதல் இலக்கையும் எதிரியின் ஆட்படைகளையும் அழித்தல்), காப்பளிக்கும் உபகுழு (உதவி செய்வதற்காக வருகின்ற எதிரிக்கு இடையூறு செய்தல், குழுவின்பிரதான பிரிவுகள் எதிரியால் பின்தொடரப்படுவதைத் தடுக்க உதவிசெய்தல், பின் தொடர்ந்து வருபவர்களை வேறு பக்கங்களுக்குத் திசைதிருப்பிச் செல்லுதல் அல்லது அவர்களைப் பதுங்கித் தாக்குதல் பொறிக்குள் இழுத்துச் செல்லுதல்).

சட்டபூர்வமற்ற ஆயுதக் குழுக்களின் திடீர்த்தாக்குதலுக்குரிய இலக்குகளாக சோதனை நிலையங்கள், அரச படைகளின் சிறிய முகாம்கள், வெவ்வேறு வகையான களஞ்சியங்கள், தளங்கள், அரச அலுவலகங்கள், நிறுவனங்கள் போன்றன விளங்குகின்றன.

திடீர்த்தாக்குதலை மேற்கொள்கின்ற போது அது திகைப்புத் தாக்குதலாக அமைவதில் பிரதான கவனம் செலுத்தப்படுகின்றது. ஆகவே தான் குழுக்கள் ஆரம்ப நிலைக்கு நகர்ந்து செல்வது வழக்கமாக இரவில் உருமறைப்பு நடைமுறைகளை இறுக்கமாகக் கடைப்பிடித்தவாறு மேற்கொள்ளப் படுகின்றது. ஒன்றில் கெட்ட கால நிலையைக் கொண்ட பகல்வேளையில் (விமானப்படைத் தாக்குதலைத் தவிர்ப்பதற்காக) அல்லது இருள் சூழ்வதற்குச் சற்று முந்திய மாலைப்பொழுதில் அல்லது அடுத்தநாள் இரவு திடீர்த்தாக்குதல் மேற்கொள்ளப்படுகின்றது. குழுக் கட்டளையாளன் வானொலித் தொடர்புக் கருவி மூலம் அல்லது முன்னரேயே நியமிக்கப்பட்ட குறியீட்டுச் சைகைகள் மூலம் (மின்சூள் ஒளி, அபிநயம், வெளிச்சக்குண்டு) உபகுழுக்களை நிர்வகிக்கின்றான். திடீர்த்தாக்குதல் மிக வேகமாக சில நிமிடங்கள் மாத்திரமே நடைபெறுகின்றது. .தன்பின், போராளிகள் சிறுசிறு குழுக்களாகப் பிரிந்து வெவ்வேறு திசைகளில் வேகமாகப் பின் வாங்கிச் செல்கின்றார்கள்.



குண்டுத் தாக்குதல்கள் இவற்றின் இலக்குகளாக விமானநிலையங்கள், முகாம்கள், இராணுவக் களஞ்சியங்கள், தளங்கள், சோதனை நிலையங்கள், அரச அலுவலகங்கள் போன்றன விளங்குகின்றன. மக்களுக்கு முன் தமது பலத்தைக் காட்டுதல், சட்டபூர்வமற்ற ஆயுதக் குழுக்களை அடக்கும் திறன் அரசிடம் உள்ளதென்ற மக்களின் நம்பிக்கையை உடைத்தல், ஆளணிகளைக் களைப்படையச் செய்தல், அரச படைகளின் ஆயுதங்களையும் கனரக வாகனங்களையும் பொருட் தளவாடச் சேமிப்புக்களையும் அழித்தல் போன்றவற்றிற்காகவே வழக்கமாகக் குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன.

குண்டுத் தாக்குதல் நடத்துவதற்கு எப்பொழுதும் முற்கூட்டியே தயார்ப்படுத்தப்படுகின்றது. இந்நோக்கத்திற்காக இலக்கின் தற்காப்பு அமைப்பைப் பற்றி வேவுபார்க்கப் படுகின்றது. தாக்குதல் கருவிகளுக்கான நிலைகள் தீர்மானிக்கப்படுகின்றன (அதிகமாக . தோட்டங்கள், வீட்டுத்தோட்டங்கள், தனியாகவுள்ள வீட்டு வாசல்கள் போன்ற இடங்களில்) பின்வாங்குகின்ற பாதைகளும் பின் தொடர்ந்து வருபவர்களைப் பதுங்கித் தாக்குவதற்கான இடமும் குறிக்கப்படுகின்றன. குண்டுத் தாக்குதல் கருவிகளாக கனரக இயந்திரச் சுடுகலன்கள் எறிகணை செலுத்திகள், முக்காலியில் பொருத்துகின்ற எறிகணை செலுத்திகள் போன்றன விளங்குகின்றன. இடையிடையே இவற்றை நகரக்கூடிய தளங்களிலும் பொருத்துகின்றனர் (எடுத்துக்காட்டாக, இழுவையமைப்பைக் கொண்ட வாகனங்களின் அடிச்சட்டங்களில்). குண்டுத் தாக்குதல்களை மேற்கொள்கின்ற போது, இலக்கு இருக்கின்ற பிரதேசத்தில் கூடுதலான சமயங்களில் சூட்டுவழுத் திருத்தவாளன் ஒருவன் நவீன தொலைத்தொடர்பு சாதனத்துடன் இருப்பான். அவனுக்கு 2 - 3 பதுங்கிச் சுடுபவர்கள் காப்பளிப்பார்கள். அந்நேரத்தில் அவர்களும் தமது சூடுகளால் மேலதிக குழப்பங்களை உண்டாக்குவார்கள்.

### வீதிகளில் கண்ணிவைத்தல்

போக்குவரத்துப் பாதைகளில் கண்ணிவெடிச்சமரை மேற்கொள்வதில் சட்டபூர்வமற்ற ஆயுதக் குழுக்கள் எப்பொழுதும் அதிகூடிய கவனம் செலுத்துகின்றன. இதனது உதவியுடன் கெரில்லாக்கள் படைகளின் நகர்வையும் விநியோகத்தையும் தடைசெய்ய அல்லது கூடுதல் இடையூறு விளைவிக்க முயற்சிக்கின்றார்கள். அத்துடன் அரச தொழிற்சாலைகள், அலுவலகங்கள் ஆகியவற்றின் வேலையைச் சீர்கெடச்செய்யவும் அதிகாரக் கட்டமைப்புக்களை சீரழிக்கவும் மக்களைப் பயமுறுத்தவும் முயற்சிக்கின்றார்கள்.

கண்ணிவைப்பதற்கான கருவிகளாக சோவியத் (ரசிய) மற்றும் பிறநாட்டுத் தயாரிப்பு உத்தியோகபூர்வக் கண்ணிகள், சுய தயாரிப்புக் கண்ணிகள், சிதறல் வெடிகுண்டுகள், வெடிப்பொறியமைப்புக்கள் போன்றன பயன்படுத்தப்படுகின்றன. இவற்றில் மின்சார முறையமைப்பில் வெடிக்கின்ற அல்லது வானொலி மூலம் (குறிப்பாக, நோக்கியுள்ள திசைக்கு வெடித்துச் சிதறுகின்ற சிதறல் குண்டுகள்) வெடிக்கின்ற கட்டுப்பாட்டு கண்ணிகளும் சிதறல் குண்டுகளும் அத்துடன் எதிர்பாராத கண்ணிகளும் உள்ளடக்கப்படுகின்றன. சட்டபூர்வமற்ற ஆயுதக் குழுக்களின் மாநிலங்களில் கண்ணி வைப்பதற்காகச் சிறப்பாகத் தயார்ப்படுத்தப்பட்ட 4 - 5 பேரைக் கொண்ட குழுவும் இருக்கின்றது.

வீதிகளில் கண்ணிகளும் சிதறல் குண்டுகளும் வழக்கமாக முற்கூட்டியே பொருத்தப்படுகின்றன.

தொடர்வான்...
நெற்றிபொறியன்

# உயிரிலும் மேலான அல்லாஹ்வை அவமதித்தாலும் அரசாங்கத்திற்கே வால் பிடிப்போம் - சாணக்கியன் வாய் திறக்ககூடாது



உயிரிலும் மேலான அல்ஹாவை நிந்தித்த ஞானசார தேரருக்கு எதிராகவும் தற்போதைய அரசிற்கு எதிராகவும் நடவடிக்கை எடுப்பதற்கு துப்பில்லாத மர்ஜான் பளீல், ஹரிஸ் ஆகிய இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்களும் முஸ்லிம்களுக்கு ஆதரவாக குரல் கொடுத்த சாணக்கியன் மீது பாராளுமன்றத்தில் ஆற்றிய உரை முஸ்லிம் சமுதாயத்தை மீண்டும் அவமரியாதை செய்கின்ற விடயமாக அமைந்துள்ளது. கடந்த 30 ஆண்டு காலமாக அரசுடன் ஒத்த அரசியலை செய்துவருகின்ற முஸ்லிம் அரசியல் தலைமைகள் முஸ்லிம் மக்களை ஏமாற்றி அவர்களுடைய உரை வெளிபாட்டை இந்த நாட்டில் குழிதோண்டி புதைக்கின்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார்கள். ஆடு நனையுது என்று ஓணான் அழுததாக மர்ஜான் பளீல் எம்பி தெரிவித்த கருத்து அல்ஹாவை நிந்தித்தாலும் அதைப்பற்றி கரிசனை கொள்ளாது தமது சுகபோக வாழ்க்கைக்காகவே இத்தனை நாடகங்களையும் முஸ்லிம் அரசியல் தலைமைகள் அரங்கேற்றி வருகின்றன. அதுபோன்று ஹரிஸ் எம்பியினுடைய கருத்தை பார்க்கின்ற பொழுது இனவாத அரசியலை த.தே. கூ பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் பேசுகின்றார். எமது சமுதாயத்திடம் அனுதாபத்தை பெற்றுக்கொள்ளலாம் என அவர் புலம்புகின்றார். இவர்களின் இரட்டை வேடம் எமக்கு தெரியும்.

ஆகவே எமது விவகாரங்களை நாங்களே பார்த்துக்கொள்வோம் என்பதாகவே அந்த விடயம் அமைகின்றது. ஹரிஸ் எம்பியின் பாராளுமன்ற உரையானது ஒட்டுமொத்த முஸ்லிம் சமுதாயத்தையும் அரசிடம் அடைவு வைக்கும் செயற்பாடாகவே அமைகின்றது. அவருடைய உரையை உற்று நோக்கும் பொழுது நாங்கள் அரசுக்கு சார்பான எம்.பிக்கள் என்ற குற்றச்சாட்டுக்கள் இருக்கின்ற போதிலும் இந்த உயரிய சபையில் உறுப்பினர்களாக சிரேஷ்ட அரசியல்வாதிகளான இம்தியாஸ் பாக்கீர் மாக்கர், கபீர் காஸிம், ரவூப் ஹக்கீம் போன்றோர்களும் முஜிப் ரஹ்மான் போன்றோர்களுக்கும் இருக்கிறார்கள். இவர்களுக்கு இல்லாத ஞானமா இவருக்கு வந்துள்ளது. நிதானமாக பேசக்கூடிய தமிழ் தலைமைகளும் இந்த சபையில் இருக்கிறார்கள். இந்த சபையில் எதைப் பேசவேண்டும் எதைப் பேசக்கூடாது என்று தெரியாமல் ஒருவர் மட்டும் காவடி எடுத்து ஆடுவதை அனுமதிக்க முடியாது என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் பிரதித்தலைவரும், திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் தெரிவித்தார். அன்று (06) பாராளுமன்றத்தில் உரையாற்றிய அவர் அங்கு மேலும் கருத்து தெரிவிக்கு போது, இலங்கையில் வாழும் ஏனைய சமூகங்களுடன் நல்லிணக்கமாக வாழும் சமூகமாக 1000 வருடங்களுக்கு மேலாக முஸ்லிம் சமூகம் வாழ்ந்து வருகிறது. அப்படியான சமூகத்தை நோக்கி ஞானசார தேரர் போன்றோர்கள் இழிசொற்களை பேசி வருவதுடன் அண்மையில் அல்லாஹ் தான் ஈஸ்டர் தாக்குதலுக்கு காரணம் என்று பேசியுள்ளார். இவருக்கு எவ்வகையான நடவடிக்கையை எடுப்பது என்று முஸ்லிம் புத்திஜீவிகளும், மார்க்க அறிஞர்களும், நாங்களும் பேசி பாராளுமன்ற கலறிக்கு பேசாமல் உரிய சட்டநடவடிக்கை எடுக்க முடிவெடுத்து பொலிஸிலும், குற்றப்புலனாய்வு திணைக்களத்திலும் முறைப்பாடு செய்துள்ளோம்.

அந்த சட்ட நடவடிக்கைகளுக்கான ஏற்பாடுகளை செய்த போது பாராளுமன்றத்தில் ஒரு மாற்று சமூக உறுப்பினர் இவ்விடயம் தொடர்பில் கடுமையாக பேசினார். அவரின் உரைக்கு நாங்கள் தடைபோட்டவர்கள் அல்ல. அவருக்கு அதற்கான உரிமை இருக்கிறது. அவர் அநாகரிகமாக முஸ்லிம் எம்.பிக்கள் ஊருக்கு வந்தால் தாக்குங்கள் என பேசி முஸ்லிங்கள் மத்தியில் குழப்பத்தை உண்டுபண்ணுவதற்கு முயற்சி செய்கிறார். இதனால் முஸ்லிம் சமூகம் கொதிப்பதடைந்துள்ளது. அவர் பொதுவெளியில் பேசமுதலில் முஸ்லிம் வரலாற்றை தெரிந்து கொள்ள வேண்டும்.

சிங்கள- முஸ்லிம் உறவு ஆயிரம் வருடங்களை விட கூடியது. எம். சி. அப்துல் ரஹ்மானில் தொடங்கி இந்த நாட்டின் முன்னேற்றத்தில் பல முஸ்லிம் தலைவர்கள் பங்களிப்பு செய்துள்ளார்கள். கடந்த காலங்களில் 2014 இல் அலுத்கம பிரச்சினையின் போது நாங்கள் தான் போராடினோம். 2001 இல் மாவனெல்லை பிரச்சினை வந்தபோது தலைவர் ஹக்கீம் அமைச்சு பதவிகளை தூக்கி வீசினார். 2019 இல் சஹ்றானின் பிரச்சினை வந்த போதும் நானுட்பட சகல முஸ்லிங்களும் அமைச்சுக்களை தூக்கி வீசிவிட்டு சமூகத்தின் நலனுக்காக நின்றோம். முஸ்லிம் எம்.பிக்களான நாங்கள், கண்டி, மினுவான்கொட, திகன, காலி ஜிந்தோட்ட அம்பாறை போன்ற பிரதேசங்களில் பிரச்சினை வந்த போதும் சமூக உரிமைக்காக களத்தில் இறங்கி போராடினோம். அதுமாத்திரமின்றி கிழக்கில் அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை போன்ற மாவட்டங்களில் முஸ்லிங்களை விடுதலை புலிகள் கொன்று குவித்த போது முஸ்லிம் எம்.பிக்களே அதற்கு முகம் கொடுத்தார்கள் என்பது வெளிப்படையான வரலாறு. விவாக-விவாகரத்து, மாடறுப்பு என முஸ்லிங்களுக்கு பல்வேறு பிரச்சினைகள் இருக்கும் இந்த கால கட்டத்தில் அரசுடன் பேசி தீர்வுகான முற்படும் போது இளைஞர்களை குழப்பி திசைதிருப்ப முயற்சிக்கிறார் அவர். அவரது பாட்டனாரும், தமிழர் விடுதலை கூட்டணியினரும் தமிழ் இளைஞர்களை ஆயுதம் தூக்கி தமிழ் தலைமைகளுக்க எதிராக போராட வழிகாட்டினார்களோ அதே பாணியில் முஸ்லிம் இளைஞர்களை உசுப்பி விடுகிறார். அப்படி பேச இவருக்கு என்ன உரிமை இருக்கிறது. எங்களின் மூச்சி இந்த சமூகத்தின் பால் உள்ளது. ஆனால் இரட்டை வேடம் போட யாரையும் அனுமதிக்க முடியாது.

இங்கு முஸ்லிங்களை பற்றி பேசுபவர் வடகிழக்குக்கு சென்று வடகிழக்கை இணைக்க வேண்டும் என்கிறார். ஆனால் அவருக்கு கிழக்கு முஸ்லிம் மக்களின் எதிர்காலம் தொடர்பில் பதில் இல்லை. அதே போன்று கல்முனை விவகாரத்தில் எவ்வித முன்னறிவுமின்றிவெறுமனேகல்முனைஉபபிரதேச செயலகத்தை தரமுயர்த்த கோருகிறார். கல்முனை முஸ்லிங்களின் உரிமைகள், அபிலாஷைகள் தொடர்பில் அவரால் விளங்கமுடியாமல் உள்ளது. கலரிக்கு பேசி முஸ்லிம் இளைஞர்கள் மனதில் நச்சு எண்ணங்களை விதைக்க யாரையும் அனுமதிக்க முடியாது. முஸ்லிங்களின் பூகோள இருப்புகளோ அல்லது முஸ்லிம் சமூக கட்டமைப்புக்களோ தெரியாமல் பேசிக்கொண்டிருக்கிறார்கள். இந்த நாட்டில் 1600 முஸ்லிம் கிராமங்கள் உள்ளது. அதில் வடகிழக்குக்கு வெளியே 900 முஸ்லிம் கிராமங்கள் சிங்கள மக்களுடன் இணைந்ததாக உள்ளது. அந்த கிராமத்தில் வாழும் இளைஞர்களை தூண்டி சிங்கள முஸ்லிம் உறவில் விரிசலை உண்டுபண்ண முயறசிக்கிறார்.

இதனால் அந்த மக்களின் இருப்புக்கள் கேள்விக்குறியாகிறது. இதனை அனுமதிக்க முடியாது. அம்பாறையில் நிறைய காணிப்பிரச்சினை இருக்கிறது. அதை தீர்க்க அம்பாறை அரசாங்க அதிபருடன் கடந்த வாரம் கலந்துரையாடி தீர்வை நோக்கி நகர்கிறோம். 26 வீதம் மட்டக்களப்பில் வாழும் முஸ்லிங்களுக்கு வெறுமனே 01 சதவீத காணிகள் மட்டுமே உள்ளது. அதே போன்று திருகோணமலையில் 44 வீதம் வாழும் முஸ்லிங்களுக்கும் காணிப்பற்றாக்குறை நிலவுகிறது. தோப்பூர் பிரதேச செயலகம் உப பிரதேச செயலகமாக இன்றும் இருந்து கொண்டிருக்கிறது. குச்சவெளியில் நீண்டகாலமாக தீர்க்கப்படாத காணிப்பிரச்சினை இருக்கிறது. இவற்றினை யார் பேசுவது ? யாரிடம் பேசுவது என்பதை சிந்திக்க வேண்டும். கலரிக்கு பேசி சமூகத்தை உசுப்பி விட்டு பிரச்சினைக்குள் சமூகத்தை மாட்டி விட முடியாது. இந்த நாட்டில் வாழும் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களென யாராக இருந்தாலும் முதலில் அவர்களின் வறுமையை ஒழித்துக்கட்ட வேண்டும். அதற்காகவே தூய்மையான அரசியலை முன்னெடுக்க முயலகின்ற போது காட்டிக் கொடுப்பாளர்கள், துரோகிகள் என்ற பட்டங்கள் எல்லாம் கடந்த காலங்களில் தமிழ் அரசியலிலிருந்து தோற்றுப்போனது வரலாறு. அதே போன்று முஸ்லிம் அரசியலிலும் காட்டிக்கொடுப்பு அரசியல் கலாச்சாரத்தை முஸ்லிம் சமூகத்தின் மீது திணிக்க யாரையும் அனுமதிக்க முடியாது

கடந்த 04 பாராளுமன்ற தேர்தல்களில் வென்று உறுப்பினராகியது மட்டுமின்றி கல்முனை முதல்வராகவும் இருந்துள்ளேன். எங்களை சமூகத்திலிருந்து ஓரங்கட்ட முடியும் என்றால் அது அவர்களின் பகற்கனவு. அவருக்கு எதிராக பேச இந்த சபையில் யாருமில்லை என்று நினைத்து விடக்கூடாது. இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் மற்றும் முஜீப் ரஹ்மான் அவர்களே ! நீங்கள் முஸ்லிம் சமூகத்தை வழி நடத்தும் பொறுப்பினை வந்தான் வரத்தான்களின் கையில் ஒப்படைக்க விரும்புகிறீர்களா? தயவு செய்து இடமளிக்காதீர்கள்.

ஏனென்றால் தமிழ் இளைஞர்களையும் இவ்வாறுதான் கடந்த காலங்களில் உசுப்பேற்றிஅந்த இளைஞர்கள் பல்லாயிரக்கணக்கில் அழிய நேரிட்டது. அவ்வாறான ஒரு ஆபத்து முஸ்லிம் சமூகத்திற்கு வர இடமளிக்க முடியாது- என்றார். இவ்வாறான இவர்களின் நகைவஞ்சக நடவடிக்கைகள் இன்று நேற்றல்ல காலகாலமாகவே இடம்பெற்றுவருகின்றன. உயிரிலும் மேலான அல்ஹாவை அவமதித்தாலும் சாணக்கியன்வாய் திறக்க கூடாத என்பதே இவர்களின் நிலைப்பாடு. எனவே முஸ்லிம் சமுதாயத்தினருக்கு குரல் கொடுப்பதா இல்லையா என்ற விடயத்தை தமிழ் அரசியல் தலைமைகள் சிந்தித்து செயற்படுவது இன்றைய அரசியல் கால கட்டத்தில் இன்றியமையாதது ஒன்று.

-நெற்றிபொறியன் -

# முற்றுப்புள்ளிகள் தொடர்குறியாகும் கரங்கா வட்டையின் கதை

**தேர்தல் கால உண்டியலை உடைக்கப் போவது யார்?**

இலங்கையின் பலத்தில் ஒன்றாக இருப்பது நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்ட நாடும் அந்த நாட்டில் பறந்து விரிந்து இருக்கும் வயல் நிலங்களுமாகும். சரியான பொறிமுறைகளுடன் விவசாயம் செய்தால் அரிசி உற்பத்தியில் இலங்கை தன்னிறைவடைந்த தேசமாக மாறும் என்பதெல்லாம் இப்போது யாரும் அரசியல் காரணிகளுக்காக ஏற்றுக்கொள்வதில்லை என்பதெல்லாம் வேறுகதை. அப்படி விவசாய நிலங்களில் நடக்கும் அத்துமீறல்களை, அடாவடிகளும், முறுகல்களும் நாடு பூராகவும் பறந்து விரிந்து இருக்கிறது. அதில் ஒன்று தான் கிழக்கு மாகாணத்தில் அதிக வயல் நிலங்களை கொண்ட அம்பாறை மாவட்டத்தில் அம்பாறை பிரதேச செயலகம்-சம்மாந்துறை பிரதேச செயலக எல்லையில் அமைந்துள்ள கரங்கா வட்டை.

இந்த கரங்கா வட்டை பிரச்சினையானது முற்றிலும் வித்தியாசமானது. இங்கு மோதியவர்கள் முஸ்லிங்களும்-சிங்களவர்களும். இங்கு சிங்கள மக்களினால் அதிகமாக பேசப்பட்ட விடயம் "தேச பக்தி". தேச பக்தி என்பது, அயோக்கியர்களின் கடைசிப் புகலிடம்" என்றார் சாமுவேல் ஜோன்ஸன். தேச பக்திக்கு சற்றும் குறைவில்லாத ஒன்றுதான் எமது நாட்டில் இன்றைய நாட்களில் வெகுவாக வெளிவந்திருக்கும் இனவாதம்.

ஒவ்வொரு தேர்தலிலும், அம்பாறை மாவட்ட சிறுபான்மை இன வேட்பாளர்களில் கணிசமானோரும், தமது வெற்றிக்காக பிரதேசவாதம் மற்றும் இனவாதத்தைத் தூக்கிப் பிடிக்கத் தொடங்கியுள்ளனர். குறிப்பாக, தமிழர், சிங்களவர் ,முஸ்லிம் வேட்பாளர்களில் ஒரு தொகையினர், இனவாதச் சாக்கடைக்குள் முடியுமான அளவு உருண்டு, புரண்டு கொண்டிருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது. அப்படியான இனவாத குரலில் முளைத்த பிரச்சினை தான் இந்த கரங்கா வட்டை பிரச்சினை.

அம்பாறை - சம்மாந்துறை பிரதேச எல்லையில் அமைந்துள்ள வளத்தாப்பிட்டியில் உள்ள முஸ்லிங்களின் பூர்வீகக் காணியான கரங்க வட்டை தற்போது சிங்களவர்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. வெள்ளையர்களின் காலம் முதல் இந்தக் காணியில் முஸ்லிம்கள் விவசாயச் செய்கையில் ஈடுபட்டிருந்தனர். இப்போது இந்த வயலில் முஸ்லிங்கள் கால்வைக்க முடியாத நிலை உருவாகியுள்ளது என விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். இந்த விடயம் தொடர்பில் அண்மையில் பாதிக்கப்பட்ட விவசாயிகள் சில விடயங்களை எத்திவைத்தனர்.

அதில், 2013 ஆம் ஆண்டு அம்பாறையில் நடைபெற்ற ' தேசத்துக்கு மகுடம் ' கண்காட்சியின் பின்னர் அந்தக் காணிகள் முஸ்லிம்களிடமிருந்து கைநழுவச் செய்யப்பட்டன. தற்போது அந்தக் காணிக்குள் அத்துமீறி சிங்கள மக்கள் , வேளாண்மைச் செய்கையில் ஈடுபட்டுள்ளனர். அடாத்தாக தொடர்ச்சியாக குறித்த காணியில் சிங்கள மக்கள் விதைப்புக்கான உழவு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர். எங்களின் காணி என்பதற்கான முழு ஆதாரமும், உறுதிப்பத்திரங்களும், வரைபடங்களும் எங்களிடம் உள்ளது. இந்த விவகாரம் தீர்க்கப்படாமல் நீடித்தால் இனக் கலவரம் உருவாகும் வாய்ப்பும் உள்ளது. எங்களின் காணி விடயம் தொடர்பில் அம்பாறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தும், அவர்கள் இது தொடர்பில் எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை. இப்போது கொரோனாவை காரணம் காட்டி பல அலுவலகங்களிலும் எங்களை வெளியில்தான் நிறுத்துகிறார்கள். இந்த காணியில் இருந்து கிடைக்கும் அறுவடைகளில் தான் எங்களின் குடும்பங்கள் அன்றாடம் சாப்பிடுகிறார்கள். பசளை விலையேற்றம், உரத்தட்டுப்பாடு, கொரோனா கால போக்குவரத்து பிரச்சினைகள் என்று எங்களின் நிலை இந்த நாட்களில் கடும் திண்டாட்டமாக உள்ளது. இந்தப் பாரதூரமான விடயம் தொடர்பில் அம்பாறை மாவட்ட அரசியல்வாதிகள் எவரும் உரிய முறையில் கவனத்தைச் செலுத்தாமையே தங்களது காணிகள் பறிபோவதற்கான பிரதான காரணம். தேர்தல் காலங்களில் சம்மாந்துறை, பொத்துவில், கல்முனை தொகுதிகளில் முஸ்லிம் அரசியல்வாதிகளின் மேடைகளில் எங்களின் வட்டை தொடர்பில் பேசாத நாட்களே இல்லை எனலாம். விவசாயிகளின் வாக்கை பெற இந்த மேடை வாக்குறுதிகள் வழங்கப்பட்டு வந்ததே தவிர நிரந்தரமான தீர்வுகள் எதுவும் கிடைக்கவில்லை.

எங்களின் காணிக்குள் நாங்கள் சென்று வேளாண்மைக்கு தயாராகும் சந்தர்ப்பங்களில் சிங்கள மக்கள் மண்வெட்டி, கத்தி, கரும்பருக்கும் இயந்திரங்களை கொண்டு தாக்க வருகிறார்கள். விதைப்புக்காலம் நெருங்கிக்கொண்டிருக்கிறது இவ்விடயம் தொடர்பில் ஜனாதிபதி, பிரதமர், விவசாய அமைச்சர், பிரதேச அரசியல் தலைவர்கள், பொலிஸ் உயரதிகாரிகள் தலையிட்டு உடனடியாக நியாயத்தை பெற்றுத்தர வேண்டும் என்று கேட்டுக்கொண்டனர்.

இந்த விடயமானது இன்று நேற்றல்ல பல வருடங்களாக உள்ளது. மஹிந்த, மைத்திரி, கோத்தா என மூன்று ஜனாதிபதிகளை இந்த பிரச்சினை கண்டிருக்கிறது. பல்வேறு தேர்தல்களை இந்த கரங்கா வட்டை பிரச்சினை கண்டுள்ளது. இருந்தாலும் இந்த பிரதேச விவசாயிகள் 'பஸ் போன பிறகு கை காட்டும்' மடத்தனத்தை, ஏமாற்று அரசியலைச் செய்கின்றவர்கள் குறித்து அவதானமாக இருந்திருக்க இருக்க வேண்டும். கடந்த ஆட்சிகளில் சொகுசாக அமைச்சுப் பதவிகளை வகித்துக் கொண்டிருந்தவர்கள், அவர்களின் அமைச்சின் ஊடாகவும் அவர்கள் ஆதரவு வழங்கிய அரசாங்கத்தின் ஊடாகவும் முஸ்லிம்கள் எதிர்நோக்கிய எவ்வளவோ பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைக் கண்டிருக்க முடியும். ஆனால், அவர்கள் அவற்றைச் செய்யவில்லை. அதற்கான காரணங்கள் பல உள்ளன.

சம்பந்தப்பட்டவர்களின் பொடுபோக்குத்தனம், இயலாமை, தான் அங்கம் வகிக்கும் அரசுக்கு ராஜ விசுவாசம், நீண்டகால கோமா நிலை என நாம் முன்பு குறிப்பிட்டது போன்று பிச்சைக்காரனின் புண்களைப் போல, தமது அரசியலை வெற்றிகரமாகச் செய்யும் பொருட்டு, பிரச்சினைகளைத் தொடர்ந்தும் வைத்திருக்க வேண்டும் என்கிற அயோக்கியத்தமனமான மனநிலை போன்றவைதான் அந்தக் காரணங்களாகும்.

இந்த கரங்கா வட்டை பிரச்சினை தவிர்த்து அம்பாறை மாவட்டத்தில், முஸ்லிம்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளில் மிகப் பிரதானமானது காணிப் பிரச்சினையாகும். ஆலிம்சேனை, பொத்துவில், வட்டமடு உள்ளிட்ட பிரதேசங்களில் முஸ்லிம்களின் பலநூற்றுக் கணக்கான காணிகள்



அபகரிக்கப்பட்டுள்ளன. தொல்பொருள் திணைக்களத்தால் அபகரிக்கப்பட்ட காணிகளே இவற்றில் அதிகமானவை. இந்த வரிசையில் சிங்கள சகோதரர்களின் கை வரிசையை மாட்டிக்கொண்டது கரங்கா வட்டை.

கடந்த நல்லாட்சி அரசாங்கத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் என்பன பிரதான தூண்களாக நிறுவப்பட்டிருந்தன. ஆனாலும் முஸ்லிம்கள் எதிர்நோக்கும் மேற்படி காணிப் பிரச்சினைகள் எவற்றுக்கும் தீர்வுகள் பெற்றுக் கொடுக்கப்படவில்லை. அது போன்றுதான் முன்னாள் அமைச்சர் ஏ.எல்.எம். அதாஉல்லாவும் மஹிந்த அரசில் முன்னிலை பிரமுகராக இருந்து இந்த பிரச்சினைக்கு தீர்வை வழங்க முன்வரவில்லை. வட்டமடு காணிப் பிரச்சினைக்குத் தீர்வை வழங்குமாறு அக்கரைப்பற்றிலுள்ள விவசாயிகள், மணிக்கூட்டுக் கோபுரத்துக்கு அருகாமையில் சத்தியாக்கிரகப் போரட்டம் நடத்திய போது, அங்கு சென்றிருந்த முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் அந்தப் பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுத் தருவதாக வாக்குறுதி வழங்கினார். ஆனால், பல வருடங்களாகியும் அந்த வாக்குறுதி இன்று வரை நிறைவேற்றப்பட வில்லை. அதன் தொடர்ச்சியாகவே இந்த கரங்கா வட்டையும் இருந்து வந்தது.

இந்த கரங்காவட்டை பிரச்சினை அண்மைய நாட்களில் கடுமையாக சூடுபிடித்துள்ளது. இதனை தீர்க்க வேண்டும் என்ற கனவுடன் விவசாயிகளும், விவாசாய அமைப்புக்களும் கடுமையாக போராடி வருகிறது. அதன் தொடர்ச்சியாக கரங்கா விவசாயிகள் தனது காணிகளில் விவசாய நடவடிக்கை செய்ய முடியாதவாறு பெரும்பான்மை இனத்தை சேர்ந்த சிலர் விசாயிகளை தாக்கி, வயலிலிருந்து துரத்தியிருந்த போது விவசாய அமைப்புகள் பல அரசியல் கட்சி களின் பிரமுகர்கள், அரசியல் கட்சி பிரதிநிதிகளுக்கு தெரிவித்தனர். குறிப்பாக சம்மாந்துறை பிரதேச சபை முன்னாள் தவிசாளர் இப்ராஹிம் அவர்களுக்கும் தெரிவிக்கப்பட்டது. இதனை அறிந்து கொண்ட முன்னாள் தவிசாளர் இப்ராஹிம் அவர்கள் ஹரீஸ் எம்.பி அவர்களை தொடர்புகொண்டு இவ்வாறு விவசாயிகளுக்கு வயல் வேலை செய்ய முடியாதவாறு ஒரு குழுவினர் அச்சுறுத்துவதாகவும் 1960 களில் இருந்து உறுதி, வரைபடங்கள், ஒப்புப் பத்திரங்கள் என பல்வேறு ஆவணங்கள் இருந்தும் அத்துமீறுபவர்கள் எவ்வித சட்டரீதியான ஆவணங்களுமின்றி இடையூறு செய்துவருவதாகவும் உடனடியாக இந்த விடயத்தை பொலிஸாரிடம் எடுத்துரைத்து சுமூகமாக விவசாயம் செய்ய வழியேற்படுத்தி தருமாறு கேட்டுக்கொண்டார். இதை அடுத்து ஹரீஸ் எம்.பி அவர்கள் உடனடியாக அம்பாறை அரசாங்க அதிபரை தொடர்புகொண்டு சம்மாந்துறை பிரதேச விவசாயிகளின் பக்கமுள்ள நியாயங்களை விளக்கிய போது அதனை ஏற்றுக்கொண்ட அரசாங்க அதிபரும் இதுதொடர்பில் நான் நடவடிக்கை எடுப்பதாகவும் மேலும் பொலிஸாரை கொண்டு கட்டுப்படுத்தி தீர்வை பெற்றுத்தர முயற்சிப்பதாகவும் ஹரீஸ் எம்.பி அவர்களுக்கு அரசாங்க அதிபர் உறுதியளித்தார். இதன் பின்னர் இந்த விவசாயிகளின் பிரச்சினையை ஆரம்பம் முதல் கையாண்டு வரும் சிரேஷ்ட சட்டத்தரணி நஸீல் அவர்கள் ஹரீஸ் எம்.பி அவர்களை தொடர்புகொண்டு அம்பாறையிலிருந்து அத்துமீறல்களை செய்துவரும் அந்த குழுவுக்கு பின்னால் சக்திவாய்ந்த அரசியல்வாதிகள் இருப்பதாக தகவல் கிடைத்துள்ளது. இதனால் பொலிஸ் நடவடிக்கைகளில் தொய்வு நிலை ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே அம்பாறையிலுள்ள அரசியல்வாதிகளை சந்தித்து விவசாயிகளின் நிலையை தெளிவுபடுத்தி ஆக்கிரமிப்பாளர்களை கட்டுப்படுத்தவும் அவர்களுக்கு உகவும் மனோநிலையிலிருந்து விடுபடவும் அவர்களை பணிக்குமாறு ஆலோசனை வழங்கினார்.

இதனையடுத்து கடந்த மாதம் 20ம் திகதியளவில் அம்பாறையில் பலம்பொருந்திய ஒருவராக உள்ள இராஜாங்க அமைச் சர் விமலவீர திஸாநாயக்கவை ஹரீஸ் எம்.பி சந்தித்து விவசாயிகளின் பக்க நியாயத்தை எடுத்துக்கூறி தீர்வை பெற்றுத்தர உதவுமாறு கோரினார். அம்பாறை பிரதேச செயலாளரை தொடர்புகொண்ட இராஜாங்க அமைச்சர் விமலவீர திஸாநாயக்க இவ்விடயத்தை பற்றி கேட்டறிந்து கொண்ட போது சம்மாந்துறை விவசாயிகளிடம் மட்டுமே உறுதிகளும், ஆவணங்களும் உள்ளதாக தெரிவித்தார். அரசாங்க அதிபரை உடனடியாக தொடர்புகொண்ட இராஜாங்க அமைச்சர் விமலவீர திஸாநாயக்க அம்பாறை பிரதேச செயலாளர் கூறிய விடயங்களை தெரிவித்து இவ்விடயம் தொடர்பில் விரைந்து நடவடிக்கை எடுக்குமாறும், பொலிஸாரை கொண்டு அத்துமீறுபவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுக்கொண்டதுடன் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரை தொடர்புகொண்டு அத்துமீறுபவர்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறு பணிப்புரை விடுத்தார்.

அதே போன்று சம்மாந்துறை விவசாய சங்க பிரதிநிதிகள், வட்டானைமார்கள், சட்டத் தரணி நஸீல், சட்டத்தரணி யூ.கே. சலீம் போன்றோர்கள் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரை சந்தித்து விவசாயிகளின் நியாயத்தை எடுத்துரைத்து அநியாயங்களுக்கு எதிரான முறைப்பாடுகளை பதிவுசெய்ய நடவடிக்கை எடுத்தனர்.

**தொடரும்...**

# அரசியலில் இரட்டை வேடம் போடும் தமிழ் தேசிய மக்கள் முன்னணி

பூகோள அரசியலை பொறுத்தவரையில் எதிர்பாராத மாற்றங்கள் அடிக்கடி நிகழ்வது வழமையானதொன்று. இந்த மாற்றங்களின் விளைவாக அபிவிருத்தி யடைந்திராத நாடுகள் மீது தமது அதிகா ரத்தை திணிக்கும் செயற்திட்டங்களை குறித்த நாடுகள் கையாளுகின்றன. அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கும், அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளு க்கும் இருக்கக்கூடிய பிரச்சனைகளை பார்க்கும் பொழுது சமூகம் சார்ந்த, அரசியல் சார்ந்த, மதம் சார்ந்த, பொருளாதாரம் சார்ந்த பிரச்சனைகளாக அணுகப்பட்டிருந்தது. சர்வதேச அரங்கில் தம்மை பலம் வாயந்த ஒரு நாடாக சீனா, இந்தியா, அமெரிக்கா, இஸ்ரேல், கொரியா, ஈரான் போன்ற நாடுகள் ஆயுத பலத்திலும் பல நாடுகளை பயமுறுத்தி அச்சுறுத்திவருகின்றன.

குறிப்பாக 199 நாடுகளிலும் 40க்கும் மேற்பட்ட அரபு நாடுகள் இருக்கின்றன. இங்கு மதவாத போர் கிறிஸ்தவ நாடுக ளால் அரங்கேற்றப்பட்டு இன்னமும் தொடர்ச்சியான வன்முறை வலாச்சாரமாகவே அரபு நாட்டுக்குள் தமது அரசியல் இராஜதந்திர நகர்வு களை அபிவிருத்தியடைந்த நாடுகள் கட்டவிழ்த்து விட்டிருந்தது. இதே பார் வையில் இலங்கை பிரச்சனையும் தீர்வு காணப்படாத பிரச்சனையாகவே தொடர்கிறது. பூகோள அரசியல் பற்றி வாய் கிழிய கத்தியும் பூகோள அரசியலி னால் நாம் அடைந்த நன்மை எதுவுமி ல்லை.

அவ்வாறிருக்க மீண்டும் பூகோள அரசி யல் என்று மக்களை நம்பவைத்து கழுத்தறுக்கும் செயற்பாடுகளிலே தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலை வர் கஜேந்திரகுமார் பொன்னம் பலம் அடிக்கடி கூறிவருவார். அதிலும் அவரது இரட்டை வேடம் வெளிப்படுகி ன்றது. சர்வதேசத்தில் ஒரு கதையும் இலங்கைத்தீவில் மற்றொரு கதையுமாக இவரது அணுதுகுமுறை தொடர்கிறது. இந்தியாவோடு த.தே.கூ அண்மையில் சந்திப்பை ஏற்படுத்தியது தவறு என்று சுட்டிக்காட்டும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திர குமார் பொன்னம்பலத்தின் தரப்பு அதே இந்திய வெளியுறவுச் செயலாளர் ஹர்ஷ் வர்தன் ஷ்ரிங்லாவை சந்தித்திருப்பது வேடிக்கைக்குரிய விடயம். இந்தியா வின் பங்களிப்பு இன்றி இலங்கைக்கான தீர்வினை பெற்றுக்கொள்ள முடியாது என்பது அரசியலின் யதார்த்தம். அதனையும் தாண்டி சீனாவினுடைய இலங்கையில் அத்துமீறிய நுழைவு என்பது அதனுடைய தாக்கம் என்பது தற்பொழுது வலுப்பெற்றிருக்கின்றது.

இந்தியா, இலங்கையில் தனது 30 வருட கால ஆக்கிரமிப்பை ஏற்படுத்தி கொண்ட நிலையில் அதனால் இலங்கைக்கான சாதகங்கள் குறிப்பாக தமிழீழ விடுதலை ப்புலிகளுடனான யுத்தம் நிறைவுக்கு கொண்டுவரப்படாத நிலை காணப்பட்டமையினால் மேலதிகமாக சீனாவி னுடைய உதவியை இலங்கை நாட வேண்டிய தேவை இருந்தது. அதே நேரம் இலங்கையின் விவகாரத்திலும் இந்தியாவின் இரட்டை வேடம் புலப்பட்ட மையினாலேயே இலங்கை அரசு தனது அரசியல் நிலைப்பாட்டை மாற்றிக்கொ ண்டது. இந்த சூழலில் 13ஆம் திருத்த சட்டத்தை இலங்கையில் அமுல்படுத்து வதற்கு அதனை நிறைவேற்றுவதற்க இலங்கை அரசை வலியுறுத்தியிருக்கி ன்ற அதேநேரம் தமிழ் பரப்பில் கட்சி தலைவர்களையும் இந்தியா சந்தித்து கலந்துரையாடியுள்ளது. தற்போதைய சூழலில் இந்தியாவின் பிரதான நோக்கம் என்னவென்றால் ஆசிய பசுபிக் பிராந்தி யத்தில் சீனாவின் தலையீடு என்பதை இன்றைய நவீன உலகில் கொரேனா வைரஸை பரப்பிய சீனா இன்று உலக நாடுகளுக்கே பெரும் அச்சுறுத்தலாக திகழ்கிறது. ஆயுத போரின்றி பல இலட்சம் மக்களின் உயிரை எடுத்த கொரோனா வைரசின் தாக்கம் இன்று சர்வதேச ரீதியில் சீனா ஒரு பலம் பொருந்திய நாடாக திகழ்வதற்கு அது வொரு காரணமாக அமைந்துள்ளது.

இலங்கை நாட்டை பொறுத்தவரை யில் நாடுகளில் தங்கி வாழ்கின்ற ஒரு சூழ்நிலையே தற்பொழுது உருவா கியுள்ளது. இதை வைத்து நாம் எப்படி எமது அரசியல் காய் நகர்த்தல்களை நகர்த்த வேண்டும் என்று சிந்திக்க வேண்டும். மீனுக்கு தலையையும் பாம்புக்கு வாலையும் காட்டுகின்ற அரசி யலை செய்வதனூடாக தமிழினத் திற்கு எதுவும் கிடைக்கப்போவதில்லை. ஆயுதபோராட்டம் பற்றி பேசும் த.தே மக்கள் முன்னணி இந்த ஆயுத போ ராட்டத்தை வலிநடத்தும் மனோநிலை யில் மக்கள் இருக்கின்றார்களா என்பத னையும் ஆராய வேண்டும். வீர வசனம் பேசுவதன் ஊடாக அரசியலில் தமக்கான ஒரு இடத்தை தக்க வைத்து க்கொண்டு இலங்கை அரசின் சம்பளத் தில் வாழ்ந்துவிட்டு போகலாமே தவிர தமிழ் மக்களுக்கான தீர்வுதிட்ட விடயத் தில் எதையுமே நிறைவேற்ற முடியாத சூழலே உருவாகும் என்பதனை நன்கு விளங்கிக்கொள்ள வேண்டும்.

தமிழீழ விடுதலைப்புலிகள் இயங்கி வந்த காலத்தில் செல்வராஜா கஜேந்திர னின் செயற்பாடுகள் வரவேற்கத்தக்கது. போராட்டத்தில் தமது அரசியல் ரீதியான பங்கினை அவர் செயற்படுத்தியிருந் தார் ஆனால் அந்த சூழல் தற்பொழுது இல்லை. எனவே எவ் விடயமானா லும் அரசாங்கத்திற்கு வெளிப்படையாக கூறிவிட்டு ஒரு விடயத்தை நாம் நடை முறைப்படுத்த செல்வோமாக இருந் தால் அவ் விடயம் கசிந்துவிடும். ஆகவே ஒரு மக்கள் புரட்சியை இந்த நாட்டில் உருவாக்க வேண்டுமாக இருந்தால் அல்லது ஆயுத போராட்ட த்தை உருவாக்க வேண்டுமாக இருந் தால் அதனுடைய நடைமுறை சார்ந்த விடயங்கள் பற்றி நடைமுறையான செயற்பாடுகளிலே தொடர்ந்தும் களமி றங்க வேண்டும். தமிழினத்திற்காக குரல் கொடுக்கின்றோம் என்ற போர் வையில் சிங்கள அரசை எதிர்க்க துப்பி ல்லாத இவர்கள் தமிழ் கட்சிகளை சின்னாபின்னமாக்கி இதுதான் இன்றை ய இராஜதந்திரம் என்று கூறிக்கொண்டு தமது அரசியலை காய் நகர்த்தி வருகி ன்றார்கள். ஒரு பாராளுமன்ற உறுப்பி னர் இலங்கையின் சட்டதிட்டங்களுக்கு அமைவாகவே செயற்படுவார் என சத் தியப்பிரமாணம் மேற்கொள்கின்றார்.



அரச பாதுகாப்பு சொகுசு வாகனங்கள் என்று தம்வசம் வைத்துக்கொண்டு மக்களை நடுவீதியில் போராட்டத்திற்கு அழைத்து அவர்களின் போராட்டத்தில் இந்த அரசியல் கட்சிகள் குளிர்காய்கி ன்ற நிலைமையே தற்பொழுது உருவா கியுள்ளது. போராட்ட களம் என்பது வேறு அரசியல் போராட்டம் என்பது வேறு இரண்டையும் ஒன்றுடன் ஒன்று பொருத்திப்பார்ப்பது என்பது எமக்கான நிலப்பரப்பை வைத்திருந்தால் மட்டுமே அது சாத்தியமாகும். 40 ஆயிரம் சவப் பெட்டிகளை தயார்ப்படுத்துங்கள் என்று கூறிவிட்டு தனது சுய பாதுகாப்பை தேடி மறைந்துவிட்ட செல்வராஜா கஜேந் திரன் இனப்படுகொலை பற்றி பாராளு மன்றத்தில் பேசியது வரவேற்கத்தக்கது. காரணம் அந்த பேச்சு சுதந்திரமாவது தற்பொழுது வழங்கப்பட்டுள்ளமையா கும். இக் கட்சிகளின் குறைபாடுகளை கூறுவதல்ல எமது நோக்கம் த.தே கூட்டமைப்பும் அதில் உள்ளவர்களும் இதனையே செய்துவருகின்றார்கள்.

தமிழ் தேசிய கூட்டம் பிளவுபட்டு அதற்கு எதிரான ஒரு கட்சி உருவாகியிருப்பது அல்லது வளர்ந்திருக்கின்றது என்றால் அந்த கட்சி சரியான பாதையில் பயணி க்க வேண்டும். தொடர்ந்தும் அரைத்த மாவை அரைத்துக் கொண்டிருப்பது பிரயோசனமற்றதொன்று ஆனால் அந்த விடயங்களை மனதில் கொண்டு இரக சியமான முறையில் அதனை கொண்டு செல்வதன் ஊடாக எமது தாயகம் தேசி யம் தயநிர்ணய உரிமை என்ற விடயத்தை அடைய முடியும். த.தே.ம முன்னணிக்குள்ளும் மாறுபட்ட கருத் துக்களின் ஊடாக பிரிந்து செயற்படுகி ன்றார்கள். வெளிப்படையாக தங்களை தேசியத்தை மீட்கவந்த மீட்பர்கள் என்று காட்டிக்கொண்ட அதேநேரம் அரசா ங்கத்தை இவர்கள் வெளிப்படையாக எதிர்ப்பதன் ஊடாக தென்னிலங்கை யில் ஒரு கிளர்ச்சியை உருவாக்கி தமிழ் மக்களுக்கான தீர்வினை பெற்றுக்கொ ள்ளாத வகையில் செயற்படுவதற்கான ஒரு செயல் வடிவங்களையும் கொடுத்து வருகின்றார்கள். ஈழப்போரின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்ற பசில் ராஜபக்சவி னுடனான நேரடி தொடர்பில் கஜேந்திர குமார் பொன்னம்பலம் அவர்களுக்கும் நெருக்கிய தொடர்பு உள்ளது. அவர் தமிழ் மக்கள் விடயத்தில் பதில் கூறியே ஆகவேண்டும். தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தற்போதைய செயற்பாடு கள் ஒவ்வொன்றும் பொல்லை கொடுத்து அடிவாங்குகின்ற ஒரு செயற்பாடாகவே அமைகின்றது.

குறிப்பாக ஒவ்வொரு கட்சிகளை பார் த்தும் துரோகி என்று கூறுகின்ற தமிழ் தேசிய மக்கள் முன்னணி தாம் எந்த நிலவரத்தில் இருக்கின்றோம் என்பத னை சுய பரிசோதனை செய்து பார்க்க வேண்டும். மக்கள் மத்தியில் செல்வாக் கை செலுத்துகின்ற கட்சிகள் ஒவ்வொன் றும் தாம் தான் தமிழினத்தை மீட்க வந்த மீட்பர்கள் என்று கூறுகின்றார்கள். அதற்காக காலில் விழுந்து வாக்குக ளை சேகரிக்கவும் அவர்கள் தயாராகி விட்டார்கள். இந்த நிலையில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்கள் பூகோள அரசியல் பற்றி பேசு கின்ற பொழுது அதனால் தமிழ் மக்களு க்கு கிடைத்த நன்மை என்ன என்பது பற்றியும் பார்க்க வேண்டும்.

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இந்திய வெளியுறவுச் செயலாளர் ஹர்ஷ் வர்தன் ஷ்ரிங்லாவை சந்தித்த பின்னர் ஊடகங்களுக்கு இவ்வாறான கருத் தை தெரிவித்துள்ளார். பல அரசியல் கட்சிக ளின் பிரதநிதிகளோடு ஏனைய சிவசமூக உறுப்பினர்களுடனான இரவு நேர சாப்பாட்டு சந்திப்பாகத் தான் இருந்தது. அதில் கலந்துகொண்ட அனைவருக்கும் தங்களுடைய கருத்துக்களை பதிவு செய்யக்கூடிய வாய்ப்பு இருந்தது. அந்த வகையில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் சார்பில் இந்தியாவினு டைய நலன்களை உறுதிப்படுத்தக்கூடிய வகையிலே இந்தியாவிற்கு ஒரு தேசிய பாதுகாப்பு பிரச்சனையை உருவாக்காத வகையிலே எங்களது செயற்பாடுகள் அமையும் என்ற விடயத்தை நாங்கள் சுட்டிக்காட்டியிருந்தோம். வடகிழக்கை பொறுத்தவரையில் அமைப்பு என்ற வகையிலே நாங்கள் இந்தியாவிற்கு எதிராக செயற்படக்கூடிய எந்தவொரு தரப்பும் இங்கு காலூன்றுவதை அனு மதிக்கப்போவதில்லை. ஆனால் அதே சமயம் இந்தியாவும் விளங்கிக்கொள்ள வேண்டும் எந்தளவுக்கு வடகிழக்கு வாழ் தமிழ் மக்கள் இந்தியாவினுடைய ஒரு பாதுகாப்பு கவசமாக செயற்படு வதற்கு தயாராக இருக்கின்றதோ இந்தியாவும் தமிழ் மக்களினுடைய அரசியல் அபிலாசைகளை முழுமை யாக ஏற்று செயற்படக்கூடிய வகையிலே அவர்கள் தங்களுடைய நிலைப்பாடு களையும் வைத்திருக்க வேண்டும் என்பதை நாங்கள் வலியுறுத்தியிருந் தோம்.

**தொடரும்...**

**சுழியோடி**

# உயிரிலும் மேலான அல்லாஹ்வை இழிவுபடுத்திய கலகொடஅத்தே ஞானசார தேரருக்கு இறுதி எச்சரிக்கை!

## முனாஜித் மௌலவி அவர்களுடனான சிறப்பு நேர்காணல்



கடந்தவார தொடர்ச்சி...

கேள்வி : கடந்த காலத்திலே அவர் இராணுவ புலனாய்வோடு இணைந்து செயற்பட்ட ஒருவர் அவுஸ்திரேலியாவிலே இருந்தவர். அவர் சிறிலங்கா சுதந்திர கட்சியினூடாகத் தான் அவரினுடைய பயணம் பயணித்தது. பிள்ளையான் அன்று கோட்டபாய ராஜபக்சவினுடன் நேவியினுடன் இணைந்திருந்த ஒருவர். அவருடன் தான் வந்து இணைந்திருந்தார். அவருடைய இரகசிய முகாம்களில்கூட சாணக்கியன் இருந்து பேசிய புகைப்படங்கள் கூட வெளியிடப்பட்டிருந்தது. சாணக்கியனுக்கு ஆசனங்கள் வழங்கப்படக்கூடாது என்று பலர் கூறிய நிலையிலும் திடீரென த.தே கூட்டமைப்பிலே கிழக்கு மாகாணத்தில் வைத்து ஆசனம் வழங்கப்பட்டது. அப்பொழுது மாவை சேனாதிராஜா உட்பட பலரும் எம்மிடமும் சாணக்கியன் தொடர்பாக பல கேள்விகளை கேட்டிருந்தார்கள். அப்பொழுது நாங்கள் கூறினோம் வாக்கு வங்கி தேவையாக விருந்தால் சாணக்கியனை தெரிவு செய்ய முடியும்.

ஆனால் இவர் இப்படிப்பட்ட ஒரு இடத்தில் இருந்துவருகின்றார் இவர் நாளை இலங்கையிலே ஒரு குழப்பத்தை உருவாக்குகின்ற நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற சூழல் உருவாகும் என்ற விடயத்தையும் கூறியிருந்தோம். அப்படியிருந்தும் அவருக்கு ஆசனம் வழங்கப்பட்டது. கிழக்கு மாகாணத்தை பிரதிபலிக்கின்ற பாராளுமன்ற உறுப்பனர் தான் சாணக்கியன். 2000 ஆண்டு காலப்பகுதிகளில் நடைபெற்ற அல்லது முஸ்லிம் சமூகத்தை சார்ந்த ஒரு பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட முள்ளிவாய்க்கால் பிரச்சனை நடக்கின்ற பொழுதோ அல்லது ஒரு இலட்சத்து 40 ஆயிரம் மக்கள் ஈன்டபொழுதோ யாரும் பாராளுமன்றத்தில் கூட குரல் கொடுக்கவில்லை. இவ்வாறிருக்கின்ற பொழுது சாணக்கியன் தன்னுடைய வாக்கு வங்கியை முஸ்லிம் மக்களிடம் இருந்து பெற்றுக் கொள்ளலாம் என்ற ஒரு நப்பாசையில் அவர் பேசலாம் கொள்ளலாம் அது அவருடைய விருப்பம். நீங்கள் இன்று முஸ்லிம்களால் நடத்தப்பட்ட தமிழீழ படுகொலைகளை அவரிடம் சுட்டிக் காட்டி கேட்டோம் இதற்கான ஒரு தீர்வை நீங்கள் கண்டுவிட்டு முஸ்லிம்களுக்காக குரல் கொடுங்கள் என்று. இது தவறு என்கின்றீர்களா?

பதில் : நேற்று வரை என்று பார்ப்போமானால் சிறிலங்கா சுதந்திர கட்சியின் ஆதரவாளராகவோ அல்லது புலனாய்வு துறையில் இருந்த ஒருவர் சாணக்கியன். அவர் இன்றிலிருந்து நல்லதொரு பயணத்தை நோக்கி செல்வது பிழையா. என்னுடைய பார்வையில் நான் அதை சரிகாண்கின்றேன். கடந்த காலத்தில் அவர் சிறிலங்கா சுதந்திர கட்சியுடன் இருந்திருக்கலாம் என்னிடம் பல தடவைகள் கூறியிருக்கின்றார் நான் சிங்கள மக்களுடன் இணைந்து நல்லதொரு நோக்கோடு சென்றேன் எதையாவது செய்ய வேண்டும் என்று ஆனால் அது சாத்தியப்படவில்லை. எனவே இதற்குள் இருந்துகொண்டு என்னுடைய சமுகத்திற்கு நல்லது செய்ய முடியாது என்ற காரணத்தினால் என்னுடைய இனம் சார்ந்த ஒரு கட்சிக்குள் இருந்துகொண்டு நான் இவர்களை எதிர்த்தே அரசியலை செய்ய வேண்டியதொரு நிலை இருக்கின்றது நான் அப்படித்தான் செய்யப்போகின்றேன் அதில் எனக்கு கீழிருக்கின்ற சிறுபான்மையினரை நசுக்கப்படுகின்ற பொழுது அவர்களுக்காகவும் நான் குரல் கொடுப்பேன் காரணம் தமிழ் முஸ்லிம் என பிரித்து பார்ப்பதற்கு எனக்கு தெரியாது.

நான் பார்க்க மாட்டேன் என்பது தற்பொழுது அவருடைய கொள்கை வருங்காலங்களில் அது மாறலாம் நமக்கு தெரியாது. ஆனால் அதை நான் நம்புகின்றேன். சாணக்கியன் ஐயா என்று சொல்லக்கூடியவர் இலங்கையில் சிங்கள மக்கள் தான் பாதிக்கப்பட்டாலும் சிங்களவர்களில் வெறி பிடித்தவர்கள் அல்ல நல்ல மக்கள் பாதிக்கப்பட்டாலும் அவர்களுக்காகவும் சாணக்கியன் 200க்கும் மேற்பட்டவர்கள் பாராளுமன்றத்திலே இருக்கின்றார்கள். அவர்கள் அனைவரும் குரல் கொடுக்க வேண்டும் இவர் குரல் கொடுப்பார் என்று இருக்கின்றது. இரண்டாவது விடயம் முள்ளிவாய்காலிலும் ஏனைய இடங்களிலும் தமிழ் மக்கள் கொத்து கொத்தாக கொல்லப்படுகின்ற பொழுது இந்த முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஏன் குரல் கொடுக்கவில்லை என்று கேட்டீர்கள். உண்மை தான் அவர்கள் குரல் கொடுக்க மாட்டார்கள்.

ஏனென்று தெரியுமா தேர்தல் காலங்களில் அரசை காரசாரமாக பேசிவிட்டு வாக்குகளை சேகரித்து வந்துவிட்டு பின்னர் அபிவிருத்தி என்று வருகின்ற பொழுது சரணாகதியடைந்து காலிலே விழுகின்ற ஹிஸ்புல்லாவோ. அதாவுல்லாவோ. ஹரிசோ அல்லது ரவூப் ஹக்கீமோ ரிஷாட் பதியூதினோ ஒரு நாளும் கொள்கை பேசுகின்றவர்கள் அல்ல. இலங்கையில் உள்ள தமிழ் பேசுகின்ற அரசியல்வாதிகளில் அல்ஹாவை இறைவனாக ஏற்று முகமது எம்பியை தூதுவராக ஏற்றிருக்கின்றார்களே தமிழர்கள் முஸ்லிம்கள் என்று நீங்கள் அடிக்கடி சொல்லுவீர்களே இவர்கள் அரசியலுக்கு பொருத்தமில்லாதவர்கள் காரணம் அரசியல்வாதிகள் என்றால் ஒரு கொள்கை இருக்க வேண்டும். இலட்சியம் இருக்க வேண்டும். அரசாங்கத்தை எதிர்த்து வாக்குகளை கேட்கின்றார்கள் எந்த அரசாங்கத்தை பேசினார்களோ அவர்கள் வென்றதும் அபிவிருத்திக்காக போய் சேர்கின்றார்கள். இது சரியா இவர்களை நம்பி இந்த மக்கள் வாக்களிக்க முடியுமா. எனவே இன்றைய நாளை குறித்துக்கொள்ளுங்கள் இன்றைய நேர்காணல் சாட்சியாக இருக்கட்டும்.

கேள்வி : சந்தர்ப்பம் கிடைக்கும் பொழுது நான் சாணக்கியன் அவர்களிடம் ஒரு நேர்காணலை நடத்தி அவர் ஏன் இதனை செய்தார் இவ்வாறான பிரச்சனைகள் இருக்கின்றது என்று அவரிடம் இந்த கேள்வியை கேட்பது தான் சாலச்சிறந்தது. ஆனால் நான் இந்த கேள்வியை உங்களிடம் கேட்கின்றேன். இன்று உலகளாவிய ரீதியில் பார்த்தாலும் சஹறான் குண்டுத்தாக்குதலை நடத்துவதற்கு முன் அங்கே அவர்கள் கூடி நின்று சத்தியப்பிரமாணம் செய்கின்ற பொழுது அல்ஹாவோ அப்பர் என்ற கோசத்தை முன்வைத்து காணொலியை எடுக்கின்றார்கள்.

அதற்கு முன்னர் வந்த காணொலியிலும் அல்ஹாகோ அப்பர் என்னும் கோசத்தை எழுப்புகின்றார்கள் தாக்குதலை நடத்துவதற்கு தயாராகின்றார்கள் சியோன் தேவாலயத்திற்கு தாக்குதல் நடத்தப்போகின்ற பொழுதும் மட்டக்களப்பு பள்ளிவாசலிலே தொழுகையை முடித்துவிட்டு அவர் நேரடியாக சியான் தேவாலயத்திற்கு செல்கின்றார் அதை காணொலியில் கூட போட்டுக்காட்டினார்கள். இன்று மனிதர்களை கொல்லும் பொழுதும். மிருகங்களை கொல்லும் பொழுதும். ஒரு விமானத்தை அடித்து நொருக்கும் பொழுதும் அல்ஹாவோ அப்பர் என்னும் இவர்களின் கோசத்தை இறைவன் ஏற்றுக்கொள்வாரா? எவருமே சிவனே பிள்ளையாரே முருகனே யேசுநாதரே என்று சொல்லிவிட்டு கொலை செய்வதில்லை. ஆனால் இங்கு மட்டுமில்லை முஸ்லிம் சமுதாயத்தினர் உலகளாவிய ரீதியிலே அவர்கள் அந்த கோசத்தை எழுப்புவது ஏன்?

பதில் : அல்ஹாகோ அப்பர் என்றால் பொருள் என்ன தெரியுமா அல்ஹா மிகப்பெரியவர் அல்ஹாவை விட வேறு பெரிய சக்தி இல்லை. நன்மையான அனைத்து விடயங்களுக்கும் இறைவனுடைய தீர்ப்பை கொண்டு ஆரம்பிக்கின்றேன் என சொல்ல வேண்டும். அல்ஹாகோ அப்பர் இறைவன் நீங்கள் பெரியவர் என்று அனைத்து நன்மையான விடயங்களுக்கும் செய்ய வேண்டும். பிழையான எந்த விடயத் திற்கும் அல்ஹாகோ அப்பர் என்று சொல்லக்கூடாது. ஆடு மாடுகளை வெட்டுவது என்பது வேறு ஏனென்றால் நீங்கள் மிருகங்கள் எதையும் அறுத்து சாப்பிடப்போவதாக இருந்தால் நீங்கள் இறைவனின் பெயர் கொண்டே அறுங்கள் அது ஆகும். மனிதனை அறுப்பதற்கு முன்பு அதை எவராவது சொன்னால் அது மிகப்பெரிய முட்டாள் தனம். நீங்கள் பார்க்கும் காணொலிகள் யாரோ ஒருவன் எங்கோ இருந்து ஒருவனின் கழுத்தை அறுக்கின்றான். சஹறானை உதாரணம் சொல்வதற்கு அவன் நல்லவனா?

சஹறான் என்ற ஒருவன் அல்ஹாவை வணங்கும் ஒருவன் முகமது நபியை பின்பற்றக்கூடிய ஒருவன் அவர் செய்திருக்க மாட்டான் என்று சொன்னேன். நீங்கள் கேட்கும் கேள்வி நியாயமானது ஆனால் சஹறான் செய்தது சரியா என்று கேட்டால் பிழை. யாரோ ஒருவரை இவர் இவ்வாறு செய்துவிட்டார் என்று கழுத்தை அறுப்பதனால் அவன் நல்லவனல்ல கெட்டவன். இது அவர்களின் பிழையான நடவடிக்கை சஹறானின் குழு அந்த காணொலியிலே அனைவரும் ஒரே மாதிரியான உடை போட்டிருந்தார்கள் அல்லவா அல்ஹா சொன்னாரா அப்படி போடும்படி இல்லை.

**தொடரும்...**

**நேர்காணல் : இரணியன்**




# பிராந்திய செய்திகள்



## இறக்குமதி பால் மாவின் விலை அதிகரிப்பு

இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோகிராம் பால் மாவின் விலையை 250 ரூபாவால் அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பால் மா இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் திங்கட்கிழமை (11) முதல் புதிய விலையில் பால் மா விற்பனை செய்யப்படும் என சங்கம் குறிப்பிட்டுள்ளது.

அதற்கமைய, ஒரு கிலோகிராம் பால் மாவின் புதிய விலை 1,195 ரூபா மற்றும் 400 கிராம் பால் பெக்கட்டின் புதிய விலை 480 ரூபா எனவும் லக்ஷ்மன் வீரசூரிய தெரிவித்தார்.

## திங்கட்கிழமை முதல் பல்கலைக்கழக மாணவர்களுக்கு கொரோனா தடுப்பூசி

பல்கலைக்கழக மாணவர்களுக்கு கொரோனா தடுப்பூசி வழங்கும் செயற்றிட்டம் எதிர்வரும் திங்கட்கிழமை (11) ஆரம்பமாகவுள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், வைத்தியர் அசேல குணவர்தன குறிப்பிட்டார்.

பல்கலைக்கழகங்களிலேயே மாணவர்களுக்கு தடுப்பூசிகள் வழங்கப்படும் என அவர் கூறினார்.

இதனிடையே, பல்கலைக்கழகங்களை மீள திறப்பதற்கான சுகாதார வழிகாட்டல்கள் வெளியிடப்பட்டுள்ளதாக பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

## வவுனியாவில் கஜமுத்துக்களுடன் மூவர் கைது

வவுனியா நகரில் 03 கோடி ரூபாவிற்கும் அதிக பெறுமதியான 04 கஜமுத்துக்களுடன் சந்தேகநபர்கள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த தகவலுக்கமைய முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பில் இந்த கைது இடம்பெற்றுள்ளது.

அக்குரணை, மஹவ, கெக்கிராவ பிரதேசங்களை சேர்ந்த 29, 30 மற்றும் 53 வயதான மூவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் மற்றும் அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட கஜமுத்துக்கள் வவுனியா பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் (STF) தெரிவித்துள்ளனர்.




## மதகுருமார்களுக்காக இயங்கும் மன்னார் அரச அதிகாரிகள்!! விவசாயிகள் கவலை!

மாகாண அல்லது மத்தியஅரசு கூறும் விடயத்தை மன்னார் மாவட்டத்தில் உள்ள அரச அதிகாரிகள் யாரும் நடைமுறைப்படுத்தாமல் மதகுருமார்களுக்காக மாத்திரம் செயற்படும் நிலை காணப்படுவதாக மன்னார் கோவில்மோட்டை விவசாயிகள் தெரிவித்தனர். மன்னார் கோவில்மோட்டை காணி விடயம் தொடர்பாக வவுனியாவில் அன்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்கள்.....

கோவில்மோட்டைக்காணிக்கு அரசாங்கத்தால் வழங்கப்பட்ட எந்த ஆவணங்களும் பங்குதந்தையகளிடத்தில் இல்லை. மடுப்பிரதேச செயலக ஒருங்கிணைப்பு கூட்டத்தில் இந்தவிடயத்தை நாம் முன்வைத்த போது இது அரச காணி என்றே உதவி பிரதேச செயலாளரால்தெரிவிக்கப்பட்டிருந்தது. அதனை எமக்கே வழங்குமாறு கோரியபோது, அந்தக்காணி வனவளத் திணைக்களத்திடம் இருப்பதாக சொல்லப்பட்டது. எனினும் விவசாயிகளின் நலன் கருதிமாத்திரம் அதனை விடுவித்து தரலாம் என வனவளத்திணைக்களம் அன்று தெரிவித்திருந்தது.

அதற்கமைய விவசாயிகள் அனைவரும் மாகாணவனவளத்திணைக்களத்திடம் விடுத்த கோரிக்கைக்கமைய அந்தக்காணிகள் விடுவிக்கப்பட்டிருந்தது. விடுவிக்கப்பட்ட பின்னர் அந்தகாணிகளை விவசாயிகளுக்கே வழங்குமாறு வடமாகாண ஆளுனரால் கடிதம் ஒன்று அனுப்பப்பட்டது. ஆயினும் மாகாண நிர்வாகமோ அல்லது மத்திய அரசு கூறும் விடயத்தை மன்னார் மாவட்டத்தில் உள்ள அரச அதிகாரிகள் யாரும் நடைமுறைப்படுத்தவில்லை.

மதகுருமார்களுக்காக இயங்குகின்ற அரச உத்தியோகத்தர்களே மடுவிலும், மன்னார் மாவட்டத்திலும் உள்ளனர். இந்த நிலை மாற்றம் பெறவேண்டும்.

நாம் விவசாயத்துக்காக கிணறுதோண்டும் போது உதவி ஆணையாளர் அதனை தடுத்திருந்தார். பின்னர் அதே ஆணையாளர் கிணற்றை தூர்வாருவதற்கு அனுமதியினை வழங்குகின்றார். நாம் விவசாயிகள் இல்லாவிடில் அவரால் எப்படி அந்த அனுமதியினை வழங்கமுடியும் என்று கேட்க விரும்புகின்றோம்.

கோவில்மோட்டை காணியை விவசாயிகளுக்கே வழங்குமாறு மாகாண அரசாங்கமும் மத்திய அரசாங்கமும் சொல்கின்றது. இதனை பிரதேச செயலாளர் நடைமுறைப்படுத்தவில்லை. அதனை செய்யாதமையினால் எங்களுக்கும் பங்குத்தந்தைக்கும் முரண்பாடுகள் ஏற்ப்பட்டுள்ளது.

அதன் தொடர்ச்சியாக ஏற்கனவே பண்படுத்திய சிறுபோக காணியினை மீண்டும் உழுது பயிர்களை நாசமாக்கி ஒவ்வொரு விவசாயிகளுக்கும் 40 ஆயிரம் ரூபாய் நட்டம் ஏற்ப்படுத்தப்பட்டது. அதுமட்டுமல்லாமல் எமது வயல்காணியில் நாம் வேலை செய்தால் காட்டை எரிப்பதாகசொல்லி பொலிசாரை அனுப்பி நடவடிக்கை எடுக்கின்றனர்.அல்லது காட்டை அழிப்பதாக கூறி ராணுவத்தை அனுப்புகின்றனர்.

தங்களுக்கு காணி வேண்டும் என்று கூறும் பங்குத்தந்தையர்கள் இதுவரை கோவில்மோட்டையை சேர்ந்த 27 விவசாயிகளையும் அழைத்து பேச்சுவார்த்தை செய்வதற்கு உடன்படவில்லை. வெறுமனே விக்கடர்சோசை, பப்பிசோசை, அன்ரனி சோசை ஆகியோர் சொல்வதனை கேட்டு அந்தக்காணி தங்களுக்கு சொந்தம் என ஆயர் சொல்கின்றார்.

மன்னார் மாவட்ட ஆயர் ராகம பகுதியில் இருந்து வருகைதந்து இரண்டு வருடங்களே ஆகின்றது. கோவில்மோட்டை விவசாயக்காணி பற்றி அவருக்கு சரியாக தெரியாது.

இயந்திரங்கள் அற்றநிலையில் மனித வலுவினை மாத்திரம் பயன்படுத்தி நீண்டகாலமாக அந்தக்காணியினை பராமரித்த எம்மை காணியைவிட்டு வெளியேறுமாறு சொல்லும் நிர்ப்பந்தநிலை இன்று ஏற்ப்பட்டுள்ளது.

நாங்கள் மதத்திற்கு எதிரானவர்கள் அல்ல. மதம் எமது வழிபாடு. விவசாயம் எமது வாழ்வாதாரம். எனவே விவசாயிகளுக்கே குறித்த காணியினை வழங்குமாறு உரிய அதிகாரிகளை கேட்டுநிற்கின்றோம் என்றனர்



# சினிமா துளிகள்



## வலிமை படத்தில் முரட்டு சிங்கிளாக நடித்துள்ள அஜித்

எச்.வினோத் இயக்கத்தில் அஜித் நடித்துள்ள 'வலிமை' படம் அடுத்தாண்டு பொங்கல் பண்டிகைக்கு திரையரங்குகளில் வெளியாகும் என அறிவிக்கப் பட்டுள்ளது. நடிகர் அஜித்தின் 60-வது படம் வலிமை. எச்.வினோத் இயக்கி உள்ள இப்படத்தை போனி கபூர் தயாரித்துள்ளார். இப்படத்தில் அஜித்துடன் யோகிபாபு, 'குக் வித் கோமாளி' புகழ், தெலுங்கு நடிகர் கார்த்திகேயா ஆகியோர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர்.

அதிரடி ஆக்ஷன் படமாக உருவாகி உள்ள இதற்கு யுவன் சங்கர் ராஜா இசையமைத்துள்ளார். நீரவ் ஷா ஒளிப்பதிவு செய்துள்ளார். இப்படத்தின் படப்பிடிப்பு முடிந்து பின்னணி பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. வலிமை படத்தில் அஜித்துக்கு ஜோடியாக பாலிவுட் நடிகை ஹுமா குரேஷி நடித்துள்ளதாக கூறப்பட்டு வந்தது. இந்நிலையில், சமீபத்திய பேட்டியில் இயக்குனர் எச்.வினோத் இதுகுறித்து விளக்கம் அளித்துள்ளார். அவர் கூறியதாவது: "கொரோனா ஊரடங்கு காரணமாக கதையில் நிறைய மாற்றங்களை செய்தோம். எனவே அஜித்துக்கும் ஹுமா குரேஷிக்கும் படத்தில் காதல் காட்சிகள் கிடையாது. அவர்கள் இருவரும் படத்தில் நண்பர்கள், அவ்வளவு தான்" என்று கூறியிருக்கிறார்.



## 'வருத்தப்படாத வாலிபர் சங்கம் 2' உருவாகுமா? சிவகார்த்திகேயன் விளக்கம்

தமிழ் திரையுலகில் முன்னணி நடிகராக வலம் வரும் சிவகார்த்திகேயன், தற்போது டாக்டர், டான், அயலான் போன்ற படங்களை கைவசம் வைத்துள்ளார். பொன்ராம் இயக்கத்தில் சிவகார்த்திகேயன், சத்யராஜ், சூரி, ஸ்ரீதிவ்யா ஆகியோர் நடித்த படம் 'வருத்தப்படாத வாலிபர் சங்கம்'. கடந்த 2013-ம் ஆண்டு வெளியான இப்படம் பிளாக்பஸ்டர் ஹிட்டானது. அப்படத்தின் காமெடி காட்சிகள் இன்றளவும் ரசிகர்களால் கொண்டாடப்பட்டு வருகிறது. இதனிடையே 'வருத்தப்படாத வாலிபர் சங்கம்' படத்தின் இரண்டாம் பாகம் தயாராக உள்ளதாக தகவல் பரவி வந்தது.

இதற்கு பதில் அளித்து நடிகர் சிவகார்த்திகேயன் கூறும்போது, "வருத்தப்படாத வாலிபர் சங்கம் படத்தின் இரண்டாம் பாகம் எடுக்கலாமா என்று பேச்சுவார்த்தை நடந்தது. என்னை பொறுத்த வரை அந்த படத்தின் இரண்டாம் பாகம் எடுக்கக்கூடாது என்பதில் உறுதியாக இருக்கிறேன். வருத்தப்படாத வாலிபர் சங்கம் ஜாலியாக எடுக்கப்பட்ட படம். அதன் இரண்டாம் பாகத்தை எடுக்க முடியாது. ரெமோ படத்தில் வரும் நர்ஸ் கதாபாத்திரத்தை வைத்து வேண்டுமானால் இன்னொரு படம் எடுக்கலாம்" என்றார்.



## 8 மொழிகளில் பிரம்மாண்டமாக தயாராகும் பிரபாஸின் 25-வது படம்



பாகுபலி பட நாயகன் பிரபாஸ் நடிக்க உள்ள 25-வது படம் குறித்த அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியாகி உள்ளது. 'பாகுபலி' திரைப்படங்கள் மூலம் தேசிய அளவில் கவனம் பெற்றவர் பிரபாஸ். இப்படத்தை தொடர்ந்து 'சாஹோ'வில் நடித்தார். மிகப்பெரிய பட்ஜெட்டில் பிரம்மாண்டமாக உருவான 'சாஹோ' திரை ப்படம் கலவையான விமர்சனங்களை சந்தித்தாலும் வசூலை வாரிக்குவித்தது. இதையடுத்து அவருக்கு பிரம்மாண்ட பட வாய்ப்புகள் குவிந்து வருகின்றன. தற்போது 'ராதே ஷ்யாம்', 'ஆதிபுருஷ்', 'சலார்' போன்ற படங்களை கைவசம் வைத்துள்ளார்.

இந்நிலையில், பிரபாஸ் நடிக்கும் 25-வது படம் குறித்த அறிவிப்பு வெளியாகி உள்ளது. அதன்படி இப்படத்திற்கு 'ஸ்பிரிட்' என தலைப்பு வைக்கப்பட்டுள்ளது. இப்படத்தை சந்தீப் ரெட்டி வங்கா இயக்க உள்ளார். இவர் தெலுங்கில் வெளியாகி வெற்றி பெற்ற அர்ஜீன் ரெட்டி படத்தை இயக்கியவர் ஆவார். இப்படம் தமிழ், தெலுங்கு, இந்தி, மலையாளம், கன்னடம் உள்பட 8 மொழிகளில் தயாராக உள்ளது. இப்படத்தை பூஷன் குமார் தயாரிக்க உள்ளார்.


## புதிய சாதனை படைத்த மாநாடு டிரெய்லர்

வெங்கட் பிரபு இயக்கத்தில் சிம்பு நடிப்பில் உருவாகி உள்ள மாநாடு திரைப்படம் வருகிற நவம்பர் மாதம் 4-ந் திகதி தீபாவளி பண்டிகையன்று திரையரங்குகளில் வெளியாக உள்ளது.


சிம்பு நடிப்பில் உருவாகி உள்ள படம் மாநாடு. வெங்கட் பிரபு இயக்கியுள்ள இப்படத்தை சுரேஷ் காமாட்சி பெரும் பொருட்செலவில் தயாரித்துள்ளார். இப்படத்தில் சிம்பு அப்துல் காலிக் என்ற கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். சிம்புவுக்கு ஜோடியாக கல்யாணி பிரியதர்ஷனும், வில்லனாக எஸ்.ஜே.சூர்யாவும் நடித்துள்ளனர். ரிச்சர்ட் எம் நாதன் ஒளிப்பதிவு செய்துள்ள இப்படத்திற்கு யுவன் ஷங்கர் ராஜா இசையமைத்துள்ளார்.

மாநாடு படத்தின் டிரெய்லர் கடந்த வாரம் வெளியிடப்பட்டது. ரசிகர்களிடையே நல்ல வரவேற்பை பெற்ற இந்த டிரெய்லர், தற்போது புதிய சாதனை ஒன்றை படைத்துள்ளது. அதன்படி இப்படத்தின் டிரெய்லர் யூடியூபில் 1 கோடிக்கும் அதிகமான பார்வைகளை பெற்று உள்ளது. சிம்பு நடித்த படத்தின் டிரெய்லர் ஒன்று 1 கோடிக்கும் அதிகமான பார்வைகளைப் பெறுவது இதுவே முதன்முறை. இதனை சிம்பு ரசிகர்கள் கொண்டாடி வருகின்றனர்.





# பல்சுவை கதம்பம்



## முழங்கையில் உள்ள கருமையைப் போக்க உதவும் வீட்டுச் சமையலறையில் உள்ள பொருட்கள்!

பேக்கிங் சோடா :- 1 டேபிள் ஸ்பூன் பேக்கிங் சோடாவை பால் சேர்த்து பேஸ்ட் செய்து கொள்ள வேண்டும். பின் அந்த கலவையை முழங்கையில் தடவி சிறிது நேரம் மென்மையாக ஸ்கரப் செய்து, பின் கழுவ வேண்டும்.

இப்படி 2 நாளைக்கு ஒருமுறை செய்யுங்கள். இதனால் முழங்கால் விரைவில் வெள்ளையாகும்.

மஞ்சள் : மஞ்சள் தூளை பால் சேர்த்து பேஸ்ட் செய்து கொள்ளுங்கள். பின் அதை முழங்கையில் தடவி நன்கு காய்ந்த பின், சோப்பு பயன்படுத்தி கழுவுங்கள். நல்ல பலன் கிடைக்க, வாரத்திற்கு பலமுறை செய்யுங்கள்.

தேன் : 1 டேபிள் ஸ்பூன் தேனில், பால் மற்றும் மஞ்சள் தூளை சரிசம அளவில் கலந்து, முழங்கையில் தடவி 1/2 மணிநேரம் ஊற வைத்து, பின் வெது வெதுப்பான நீரால் கழுவ வேண்டும். வேண்டுமானால் தேனுடன் கற்றாழை ஜெல்லை சேர்த்து கலந்தும் பயன்படுத்தலாம்.

பால் : தினமும் பாலை பஞ்சுருண்டை பயன்படுத்தி முழங்கையில் தடவி ஊற வைத்து கழுவுங்கள்.

இப்படி ஒரு நாளைக்கு பலமுறை செய்து வந்தால், விரைவில் முழங்கையில் உள்ள கருமை நீங்கி, முழங்கை வெள்ளையாகும்.

சர்க்கரை மற்றும் ஆலிவ் ஆயில் : சர்க்கரையில் ஆலிவ் ஆயில் சேர்த்து கலந்து, கருமையாக உள்ள முழங்கையில் தடவி சிறிது நேரம் மென்மையாக மசாஜ் செய்து, பின் நீர் பயன்படுத்திக் கழுவ வேண்டும்.

இப்படி தினமும் செய்து வந்தால், முழங்கையில் உள்ள இறந்த செல்கள் நீங்கி, கருமை அகலும்.

தேங்காய் எண்ணெய் மற்றும் எலுமிச்சை : தேங்காய் எண்ணெயில் எலு மிச்சை சாறு சிறிது சேர்த்து கலந்து முழங்கையில் தடவி 5 நிமிடம் கழித்து கழுவுங்கள். இப்படி 2 நாளைக்கு ஒருமுறை செய்து வர, முழங்கை கருமை காணாமல் போகும்.

எலுமிச்சை : எலுமிச்சை சாற்றை நேரடியாக முழங்கை பகுதியில் தேய்த்து, பின் குளிர்ந்த நீரில் கழுவுங்கள். இப்படி தினமும் என 1-2 வாரம் தொடர்ந்து செய்து வாருங்கள்.

முழங்கையில் இருக்கும் கருமை போய்விடும்.

எலுமிச்சை மற்றும் தேன் : எலுமிச்சை சாற்றில் தேன் கலந்து முழங்கையில் தடவி 1/2 மணிநேரம் ஊற வைத்து, பின் நீரில் கழுவுங்கள். இதனால் எலு மிச்சையில் உள்ள சிட்ரிக் அமிலம் நீங்கா கருமையை அகற்றும்.

எலுமிச்சை மற்றும் சர்க்கரை : 1 டீஸ்பூன் எலுமிச்சை சாற்றில் 1 டீஸ்பூன் சர்க்கரை சேர்த்து கலந்து, முழங்கையில் தடவி மென்மையாக சிறிது நேரம் தேய்த்து பின் நீரில் கழுவுங்கள்.

இதனால் அதில் உள்ள ப்ளீச்சிங் தன்மை, கருமையைப் போக்கும்.

கடலை மாவு மற்றும் எலுமிச்சை : 1 டேபிள் ஸ்பூன் கடலை மாவில் 1 டேபிள் ஸ்பூன் எலுமிச்சை சாற்றினை சேர்த்து கலந்து பேஸ்ட் செய்து, முழங்கையில் தடவி சில நிமிடங்கள் ஊற வைத்து கழுவுங்கள்.

இப்படி தினமும் செய்து வந்தால், குறைந்த காலத்திலேயே கருமை நீங்கி விடும்.

தயிர் மற்றும் கடலை மாவு : கடலை மாவு மற்றும் தயிரை சரிசம அளவில் கலந்து பேஸ்ட் செய்து கொள்ளுங்கள். பின் இந்த பேஸ்ட்டை முழங்கையில் தடவி 10 நிமிடம் ஊற வைத்து, வெதுவெதுப்பான நீரில் சோப்பு பயன்படுத்தி கழுவுங்கள்.

இப்படி ஒரு வாரம் தினமும் செய்து வந்தால், நல்ல மாற்றத்தைக் காணலாம்.

## சருமத்தை பொலிவாக வைத்துக்கொள்ள உதவும் உணவுகள்

தினம் ஒரு ஆப்பிளை உட்கொள்வதன் மூலம் உங்களது சருமம் பொலிவடையும். மற்றும் ஆப்பிள் ஜூஸை முகத்தில் தடவி 1-நிமிடம் கழித்து முகம் கழுவினால் சருமம் புத்துணர்ச்சிப் பெறும்.

உடலில் எவ்வளவு அதிகம் ஆன்டி-ஆக்ஸிடன்ட் உள்ளதோ அவ்வளவு அளவு சருமம் பொலிவுப் பெறும். பீட்ரூட்டில் உள்ள அதிக ஆன்டி-ஆக்ஸிடன்ட் உங்களது சருமம் பொலிவடைய நன்கு உதவுகிறது. மற்றும் முகத்தில் ஏற்படும் சுருக்கங்களை குறைக்கவும் வெகுவாகப் பயனளிக்கிறது பீட்ரூட்.

கரட் நமது அன்றாட உணவுக் கட்டுப்பாட்டில் சேர்த்துக் கொள்ள வேண்டிய உணவாகும். இதில் உள்ள பீட்டா கரோட்டின் நமது உடலில் விட்டமின் ஏ சத்து அதிகரிக்க உதவுகிறது. இதனால் சருமம் நன்கு பொலிவடையும் மற்றும் கரட் சருமம் சுருக்கமடையாமல் இருக்கவும் உதவுகிறது.

எலுமிச்சையில் இருக்கும் விட்டமின் சி நற்குணம், உங்களது சருமத்தை கரும்புள்ளிகள், முகப்பரு மற்றும் வடுக்களில் இருந்து காப்பாற்ற உதவுகிறது.

தக்காளியில் இருக்கும் லைகோஃபீன் எனும் உயர்ரக ஆன்டி-ஆக்ஸிடன்ட் சருமத்தை பருக்கள் வராமல் இருக்க உதவுகிறது. இதை உணவில் அல்லது உணவுக்கு முன் சூப்பாக உட்கொள்வது நல்லது. இயற்கையாகவே தக்காளியை உட் கொள்வதன் மூலம் சருமம் பிரகாசிக்கிறது.

பூசணியில் உள்ள சின்க்கின் தன்மை சருமத்தில் புதிய செல்களை உருவாக்கிட பெருமளவில் உதவுகிறது. இது முகத்தில் எண் ணெய் அளவை கட்டுப்படுத்துகிறது மற்றும் சருமத்தின் பொலிவை அதிகரிக்கவும் உதவுகிறது.

பசலைக்கீரையில் உள்ள ஆன்டி-ஆக்ஸிடன்ட் முகத்தில் இருக்கும் சுருக்கங்களை குறைக்கவும், முகத் தசைகளை வலுவடையச் செய்யவும் உதவுகிறது. மற்றும் இதன் நற்குணங்கள் சருமத்தில் இருக்கும் நச்சுகளை அழித்து சருமம் தெளிவடையவும், பொலிவ டையவும் நன்கு பயனளிக்கிறது.



# நாட்டில் ஜனநாயகம் அடக்கி ஒடுக்கப்படுகின்றது தமிழ் கட்சிகள் ஒன்றிணைய வேண்டும்


## தமிழரசுக் கட்சியின் தலைவரும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான – மாவை சேனாதிராஜா

கடந்தவார தொடர்ச்சி...

இதை 6 ஆம் திகதி அனுப்பி வைக்க வேண்டும் என நாங்கள் தீர்மானித்திருந்தோம். 3 ஆம் திகதி காலையில் திரு. சுமந்திரன் அவர்கள் அனைவருக்கும் அதில் சம்மந்தப்பட்ட கட்சி தலைவர்களுக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அந்த கடிதத்தை அனுப்பியிருக்கின்றார். எனக்கு 3 ஆம் திகதி காலை கிடைத்தது. அப்பொழுது 30 - 1 பற்றிய பொது அமைப்பு தீர்மானத்தின் அடிப்படையில் அதையும் அனுப்புவதாக வும் அதிலே தஸ்மன் அவர்கள் பிராங் கிழூன் அவர்களின் நிபுனத்துவ குழு போட்ட விடயங்களில் இருந்து எல்லா சந்தர்ப்பங்களிலும் அதை தயாரிக்கின்ற பொழுது அந்த அறிக்கையினுடைய அடிப்படை சேர்க்கப்பட்டிருக்கின்றது. அந்த வகையில் தான் நிபுனர் குழுவிலே இலங்கை அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் போர்க்குற்றங்களில் சம்மந்தப்பட்டிருக்கின்றார்கள். மனித உரிமை மீறல்களிலும் சம்மந்தப்பட்டிருக்கின்றார்கள் என அங்கு வந்திருந்தது. அப்பொழுது செல்வம் அடைக்கலநாதன் இந்த பகுதியை மற்றவர்கள் ஏற்க மறுக்கின்றார்கள் என்று கூறினார். ஆனால் 3ஆம் திகதி காலையில் பத்திரிகையில் அந்த பிரேரணையில் அனைவரும் கையெழுத்து வைத்து அனுப்பிவிட்டதாக வந்தது. அது உண்மையா என நான் கேட்டேன். நான் அதை அப்பொழுது பொருட்படுத்தவில்லை.

சுமந்திரனும் செல்வம் அடைக்கலநாதனும் தன்னுடன் பேசும்படி அழைத்திருந்தார். இதுவொரு வரைபு தான் நாங்கள் அதனை சேர்க்கலாம் மற்றும் அவர்கள் அனுப்பிய விடயத்திலும் 46 - 1 வந்ததன் பின்னர் என்னன்ன சேர்க்கப்பட வேண்டியதையும் நாம் சேர்த்து வேலை செய்யலாம் என்று கூறினார்கள். ஆனால் 3ஆம் திகதிக்கு முன்னர் அதிகமாக செல்வம் அடைக்கலநாதன், சித்தார்த்தன் அப்பொழுது கையெழுத்து வைத்தாரோ எனக்கு தெரியவில்லை. அந்த கடிதம் மனித உரிமை பேரவைக்கு அனுப்பப்பட்டுவிட்டது என பத்திரிகையிலே செய்தி வந்தது. அப்படியொரு கடிதம் லண்டனில் இருந்து தனக்கு கிடைத்ததாக அதாவது எப்படியென்றால் சுமந்திரனுடன் 3ஆம் திகதி காலையில் அவரோடும் செல்வம் அடைக்கலநாதனோடும் இதுவொரு வரைபு மட்டும் தான். உங்களுடைய கடிதத்தையும் அனுப்பிவிடுங்கள் நாங்கள் நாளைக்குள் அனைத்தையும் தயார் செய்யலாம் என குறிப்பிட்டிருக்கின்றேன். பின்னர் 5ஆம் திகதி இந்த கடிதங்கள் இரண்டு மூன்று தயாரிக்கப்படுகின்றன என பேச்சு இருந்தபொழுது எமது அரசியல் குழுவை உடனடியாக அழைத்து பேசியிருக்கின்றோம். அப்பொழுது என்னுடைய தலைமை உரையிலே கூறிய விடயம் இப்படியும் ஒரு பகுதி வந்திருந்தபொழுது அதை சிலர் விரும்பவில்லை. எங்களுடைய ஒற்றுமை கருதி நாங்கள் முரண்பாடுகள் இருந்த விடயங்களை தவிர்த்துக் கொண்டு ஏனைய விடயங்களை கேட்டு நாங்கள் கையெழுத்து வைக்கலாம் என நான் சுமந்திரனுடனும் செல்வம் அடைக்கலநாதனுடனும் பேசியிருக்கின்றேன். ஆகவே இதற்கான நிலைமை என்னவென்று சுமந்திரன் அவர்களுடன் அதற்காக பேசும்படி கேட்டிருந்தோம். அப்பொழுது சுமந்திரன் அவர்கள் கூறிய விடயம் ஒரு பகுதியினர் கையெழுத்து வைத்த ஒரு கடிதம் நீங்கள் குறிப்பிடும் இன்னொரு கடிதம் தான் அது. அது தனக்கு லண்டனில் இருந்து கிடைத்ததாக காண்பித்தார். இரண்டாவதாக அவர்கள் அனைவரும் கையெழுத்து வைத்தால் இன்று 5ஆம் திகதி தான் நாம் பேசுகின்றோம் சம்மந்தன் அவர்கள் கையெழுத்து வைத்துவிட்டால் நானும் கையெழுத்து வைத்து அனுப்புவேன் என சொன்னார். நாங்கள் அனைவரும் எங்களுடைய கருத்தை அரசியல் குழுவிலே பேசியதன் பின்னர் இறுதியாக கட்சி தலைவர் என்ற முறையில் நான் கூறிய விடயம் 6ஆம் திகதி காலையில் பாராளுமன்றம் இருக்கின்றது அங்கே திரு. விக்னேஸ்வரன் வரக்கூடும் கஜேந்திரகுமார் வரக்கூடும் எங்களது பாராளுமன்ற உறுப்பினர்கள் வருவார்கள் அதில் மாற்றம் ஏதும் செய்ய வேண்டியிருந்தால் அன்றே சம்மந்தன் அனுப்பப்போகின்றார் என்று சொல்லிவிட்டார். அனுப்பிவிட்டார் என்ற கருத்து வந்ததாகவும் எனக்கு ஞாபகம். இறுதியாக நான் கூட்டத்தை முடித்துவிட்டு பேசும்பொழுது 6ஆம் திகதி காலையில் பாராளுமன்ற உறுப்பினர்களுடனும் வந்தவர்களுடனும் ஏனைய தேசிய கட்சிகளுடனும் சந்தித்து பேசக்கூடியவர்களும் இருந்தால் அவர்கள் பேசி பொருத்தமான வகையில் அந்த கடிதத்தை அனுப்புங்கள் அல்லது அனுப்பப்பட்டுவிட்டது என்ற கருத்து இருந்தால் ஏன் அந்த நிலைமை வந்தது என்ற விடயத்தையும் பத்திரிகையாளர் மாநாட்டை நடத்த வேண்டும் என்றும் கேட்டிருந்தோம். அங்கே அப்படியான ஒரு பத்திரிகையாளர் மாநாட்டை நடத்துவதற்கான கூட்டம் நடைபெறவில்லை. அதனால் தான் நாங்கள் இங்கு திரு. சுமந்திரன் அவர்களும் சாணக்கியன் அவர்களும் 8ஆம் திகதி வந்திருந்தார்கள்.

இவ்வாறு இரண்டு பகுதியினரும் கடிதங்களை அனுப்பிய பின்னர் கூட்டத்தை முடிக்கின்ற பொழுது 5ஆம் திகதி கூறிய விடயம் திரு. சம்மந்தன் அவர்களும் அனுப்பிவிட்டார் என்றால் இது முடியும். அப்படித்தானே நாங்கள் அனைவரும் கையெழுத்து வைத்து வி.டி.எப் லண்டன் வெளியில் இருந்து வந்த கடிதங்களில் எல்லாம் கையெழுத்து வைத்தது. அதன் பின்னர் சம்மந்தன் அவர்கள் சி.வி. விக்னேஸ்வரன் அவர்கள் கஜேந்திரகுமார் அவர்கள் நாங்கள் இன்னொரு கடிதத்தை இறுதியாக அனுப்பி வைத்தனர். நாங்கள் அடுத்த ஆண்டு மார்ச் மாதம் செப்டம்பர் வரையிலே தீர்மானகரமான கூட்டம் மனித உரிமை பேரவை நடத்தி வைப்பதற்கு முன்னர் ஆணையாளர் கூறிய பல விடயங்கள் இருக்கின்றன. இந்த அரசாங்கத்தின் நடவடிக்கைகள் பற்றி நாங்கள் 1 இலட்சத்து 20 ஆயிரம் சாட்சியங்கள் இருப்பதாக ஆணையாளர் குறிப்பிட்டிருக்கின்றார். நாங்களும் அவருக்கு உதவியாக அனுப்பியிருந்த தீர்மானம் ஒன்று சர்வதேச குற்றவியல் விசாரணைக்கு இந்த அரசாங்கத்தை நிறுத்த வேண்டும் என்ற தீர்மானத்தை அனுப்பியிருக்கின்றோம். அவை தொடர்பாக நாங்கள் வேலை செய்ய வேண்டும் அதற்கு வசதியாக இயக்கங்கள் எல்லாவற்றோடும் நாங்கள் இணைந்து அந்த வேலைகளில் ஈடுபடுகின்றோம் என்பதை பத்திரிகையாளர் சொல்ல வேண்டும் என நான் சுமந்திரனிடம் கேட்டு அந்த வழியில் பத்திரிகையாளருடன் நடத்தப்பட்டது. பின்னர் தான் இயக்கங்கள் சம்பந்தமாக சுமந்திரன் அவர்கள் வார்த்தை பிரயோகங்களை பிரயோகித்ததாகவும் ஏனைய கட்சித் தலைவர்கள் அதற்கு பதிலளித்ததாகவும் அதுதான் தற்பொழுது துயரமான விடயம் இவ்வாறு கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், கடிதங்கள் அனுப்பப்பட்டுவிட்டாலும் நாங்கள் த.தே.கூட்டமைப்பிலே ஒன்றாக இருக்கின்றோம் நாங்கள் ஒன்றாக செயற்படுவோம் என்றும் அறிக்கைகளை விடுத்திருக்கின்றார்கள்.



ஆகவே நாங்கள் தற்பொழுது பேசுகின்ற பொழுது தனியே தேசிய கூட்டமைப்பாக ஒற்றுமைக்கான முயற்சிகளை நாங்கள் எடுக்க வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கின்றோம். அனைவரும் ஒன்றுபட்டு வேலை செய்ய வேண்டும் என்று சொல்லியிருக்கின்றோம். ஐ.நா மனித உரிமை பேரவை மட்டுமல்ல இலங்கை அரசியல் யாப்பில் ஒரு புதிய அரசியல் யாப்பையும் உருவாக்குவதாக இலங்கை அரசு கூறியிருக்கின்றது. அந்த விடயத்திலும் நாங்கள் எவ்வளவு தூரத்திற்கு ஒன்றுபட்டு நிற்க முடியுமோ அந்த அடிப்படையில் நாங்கள் ஒன்றுபட்டு எதிர்காலத்தில் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளையும் எடுப்போம். பொது விடயங்களிலும் அரசுக்கு எதிராக அல்லது அரசு எங்களுக்கு எதிராக செயற்படுகின்ற விடயங்களில் ஒன்றுபட்டு நாங்கள் செயற்பட வேண்டும் என்றும் நாங்கள் பகீரங்கமாக குறிப்பிட்டிருக்கின்றோம். அதைத்தான் நாங்கள் தற்பொழுதும் மீண்டும் குறிப்பிட விரும்புகின்றேன்.

**கேள்வி : உங்களுடைய கட்சியினுடைய ஒற்றுமையை நீங்கள் வலுப்படுத்துவதன் ஊடாகவே அடுத்த கட்ட தீர்மானத்திற்கு அதை எதிர்கொண்டு சீரான முறையில் அதில் பயணிக்க முடியும் என்று கூறுகின்றீர்களா?**


பதில் : ஆம் நாங்கள் திரு. சித்தார்த்தன் அவர்களுடனும், செல்வம் அடைக்கலநாதன் அவர்களும் காலையில் எடுத்திருந்தார்கள். நாங்கள் முதலில் தேசிய கூட்டமைப்புடன் இருந்த கட்சிகளுடன் நான் பேச இருக்கின்றேன். அதை விட மூன்றாவதாக ஒரு கடிதம் தயாரிக்கப்பட்டது என்று தமிழரசுக் கட்சி உறுப்பினர்களிடையே ஒரு கருத்து வெளியில் கொண்டுவரப்பட்டது. அந்த கடிதம் எங்களுக்கு 5ஆம் திகதியே திரு. சிறிதரன் அவர்கள் அந்த கூட்டத்திலே சொல்லியிருக்கின்றார். நாங்கள் அவ்வாறு யோசித்தது ஒன்று ஆனால் அந்த கடிதத்தை அனுப்பவில்லை என்று சொல்லியிருந்தார். அவர்கள் சம்மந்தமாகவும் அவர்கள் எது சரி என்று அறிய வேண்டும் என நாங்கள் கோரிக்கை விடுத்திருக்கின்றோம். ஆனால் தற்பொழுது அவர்கள் அதில் கையெழுத்து வைத்ததாக என்னுடைய கட்சியை சேர்ந்த நிர்வா செயற்குழுவில் இருக்கின்றவர்களும் என்னை சந்திப்பதற்கு இருக்கின்றார்கள். நாங்கள் முதலாவதாக தேசிய கூட்டமைப்பில் இருக்கின்ற தலைவரோடு பேச வேண்டும்.

இரண்டாவதாக எங்களுடைய குழுவிலே இருக்கின்ற உறுப்பினர்களோடு நான் ஒரு கலந்துரையாடலை மேற் கொள்ள வேண்டும். பின்னர் என்னுடைய செயற்குழுவும் விரைவிலே நாங்கள் கூற இருக்கின்றோம். அதன் பின்னர் பார்த்தால் 24 ஆம் திகதிக்கு பின்னரும் இந்த தடைகளும் கொரோனா வைரஸ் காரணமாக இருக்கின்றது. நாங்கள் வேறு மாற்றுவழிகளிலும் எங்களுடைய கட்சி உறுப்பினர்களுடனும் பேசி இந்த வார்த்தை பிரயோகங்களை மட்டுப்படுத்த வேண்டும் ஒற்றுமையை பேண வேண்டும் அதற்கான நடவடிக்கைகளில் நாங்கள் ஈடுபடக்கூடிய தீர்மானங்களை பெருக்க வேண்டும் என்றும் அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருக்கின்றோம்.

**தொடரும்...**

**இரணியன்**

# சுமைதாங்கி (சிறுகதை)



ஆத்தா நீ அங்க என்கூட ஏன் வரமாட்டீங்குற ஒனக்கு தனி ரூம்ம்மா. அதுக்குள்ள நீ செரமப்படாம போகுறதுக்கு கக்கூஸ் குளிக்க எல்லா வசதியும் இருக்கு. கீழயே எல்லாம் இங்க மாடி நீ ஏறிப்போகனும். திரும்ப அவசரத்துக்குக் கீழவரனும். இந்த வீடு முட்டுச்சந்து காத்தும் வராது ஒரு மண்ணும் வராது. இங்க கச கசன்னு சணடையும் சச்சரவுமா இருக்கும் தண்ணி புடிக்கத் தினம் கொழாயில சண்டை போடனும்.. வெளிய போனா ஒரு ஆட்டோக்காரன் இந்தத் தெருவுக்கு வரமாட்டான்.. எடஞ்சலா இருக்குன்னு அங்க மோட்டார்போட்டு நல்ல தண்ணி எப்பையும் வாரமாதிரி டேங்க கட்டிருக்கேன். நல்ல காத்தோட்டமா இருக்கும் சுத்தி நல்லா எடம்விட்டுக்கட்டிருக்கேன். நம்ம கொல தெய்வக்கோயிலுக்கு நீ நடந்தே போயிடலாம் பக்கம் தான். நானே கார் வாங்கப்போறேன் அதுனால நீ போகனும்ற எடத்துக்கு நானே கொண்டு போய் விட்டுக்கூட்டியாருவேன்.

அதுமட்டுமில்லமநீசமைக்கவேண்டிய வேலை இல்ல. இம்புட்டுநாள் ஒழைச்சி ஓடாத்தேஞ்சிட்ட. இனி ரெஸ்ட் எடு என் பொஞ்சாதி எல்லாத்தையும் பாத்துக்குவா உன்ன நல்லா கவனிச்சிக்குவா… அங்க வந்துரு ஆத்தான்னு கால்ல விழுந்து கெஞ்சாத கொறையா அழாத கொறையாக்கூப்புட்டான். ஆனா அவனோட ஆத்தா அசையிறதா இல்ல அவ சொன்னா. நீ சொல்றது எல்லாம் உண்மைதான்.. ஆனா மூத்தவனோட பிள்ளைக எங்க அப்பத்தான்னு என்ன தேடுமேடா அதுகலைப்பாக்காம என்னால இருக்கமுடியாதே அதுகலால அங்க வரவும் முடியாது… பாவமில்லயான்னா…அப்ப நான் உன் மகனில்லையா , என் பிள்ளைகளுக்கு அப்பத்தா வேணாமா எனக்கும் ஒன்னயப்பாத்துக்கிட்டு இருக்கனும்னு தோணாதா.. எனக்காக எம்புட்டு கஸ்ட்டபட்ட. நான் கஸ்ட்டப்பட்ட காலத்துல யெல்லாம் கூட இருந்துட்டு நல்லாருக்குற காலத்துல அதுக்கு நன்றிக்கடன் காமிக்க நெனைக்கிறப்ப வரமாட்டீங்குறியே இது நாயமா இதுதான் நீ எம்மேல வைச்சிருக்குற பாசமான்னு கண்ணுல தண்ணி வழியக்கேட்டான்…. அவளுக்கு பழைய நெனப்பு மனசுல ஓட ஆரம்பிச்சது. அவளோட புருசன் ஒரு சின்ன கம்பெனில வேலைக்கிப்போய்கிட்டு இருந்தான். சம்பளம் பத்தாது. இதுல அவளோட மாமியா மாமனார் தம்பிக எல்லாரும் கூட்டுக்குடும்பமா இருந்ததுனால வைச்சிப்பாக்க வேண்டியதா இருந்துச்சு. அதுக்கு சமாளிக்க என்ன பண்ணலாமுன்னு யோசனை பண்ணி சின்ன சின்ன வேலைக்கி அவ போனா ஆனா அது கட்டுபடி ஆகல…அப்பத்தான் பக்கத்துல சொந் தக்கார அம்மா ஒண்ணு வடக்கடை வச்சிருந்துச்சு. அது சொல்லிச்சி பேசாம நீ வடைசுட்டு யாவாரம் பண்ணு. ஊருக்குள்ள தெருவுக்குள்ள கொண்டுபோய் வித்தா நல்லா ஓடும் என்னால அலைய முடியல அத நீ செய்யலாமுல்லன்னு சொல்லிகத்து க்குடுத்துச்சு… கொஞ்சநாள்ல அவ புருசனும் அல்ப்பாயிசுல போக கஞ்சிக்கே திண்டாட்டம்ன்ற மாதிரி ஆயிப்போச்சு. அப்ப நெலகொலைஞ்சி நின்னா . அப்பத்தான் ஏற்கனவே வடைக்கடை போட்டுருந்த அம்மா வெளியூல மக வீட்டுக்குப்பொய் செட்டில் ஆயிடுச்சு… அதுனால கடைய அங்கயே போட்டுச்சு.

தெருவோரத்துல பலகாரக்கடை போட்டு உளுந்தவடை ஆம வடை வாழக்கா பஜ்ஜி சுட்டு யாவாரம் பண்ணுச்சு. . பெருசா சொத்து வருமானம் எதுவுமில்ல. ரெண்டு மகனுக தான் . உருண்டு பொறண்டு எப்புடியோ இந்த ப் பலகாரக்கடைய நம்பித் தான் பொழப்புன்னு ஆகிப்போச்சு.. ஒத்தாசைக்கி மாமியா இருந்தா யாவாரம் நல்லாத்தான் போச்சு…

நம்ம ஆளுக அதுலயும் கடன் சொல்லுவாக. ஞாயமா குடுக்குறவுகளும் உண்டு. ராமம் போடுறவுகளும் உண்டு கேட்டா ஓம் பல காரத்துக்குக்காசு குடுக்குறதுக்குப் பயந்துக்கிட்டு ஊரவிட்டு ஓடிடமாட்டோம். அழுத்திக் கேக்கவும் முடியாதுமொான வந்துரும்.கூரக்கடையிலதான் கடன் சொல்லி பருப்பு உளுந்து எண்ண எல்லாம் வாங்கியாந்து பலகாரம் சுட்டு வித்து அப்புறம் காசக்குடுக்குறது வழக்கம் முன்னபின்ன ஆனாலும் திருப்பிக்குடுத்துரும் அதுனால கடன் குடுப்பார் கடைக்காரரு…வீட்டுக்குப் பக்கத்துல கடைபோட்டு வடை சுட்டு அத மாமியாவப்பாக்கச்சொல்லிட்டு தட்டுல பலகாரம் எடுத்துக்கிட்டுமத்தியானத்துல ஊரைச்சுத்தி யாவாரம் பண்ணும். கஞ்சிக்கி சாப்பாட்டுக்கு வாங்கிக்கிவாக.. வடை பஜ்ஜி அம்புட்டு ருசியா இருக்கும். விசேசங்களுக்கு ஆடர் குடுத்து 100, 200,300 வடைன்னு வாங்கிட்டுப்போவாக… நம்ம சுட்டாலும் அது மாதிரி சுடமுடியாதுன்னு சொல்லுவாக…

மூத்தமகனுக்குக்கொஞ்சம் வெவரம் பத்தாது. ரெண்டாவது மகன் புத்திசாலி… ரெண்டு பேருக்குமே சரியாபடிப்பு வரல. அதுனால மூத்தவன் சீக்கிரமே ஒரு கடையில வேலைக்கிச்சேந்துட்டான்… சம்பளத்துக்கு ரெண்டாவது மகன் ஒருத்தர் கூட சமையல் வேலைக்கிப்போனான். அவர் தொழில் சொல்லிக்குடுத்தாரு… இவுக பரம்பரையிலயே எல்லாருக்கும் சமையல் நல்லா வரும். அதுனால அவனுக் அதைக்கெட்டியா புடிச்சிக்கிட்டான்.

ஆரம்பத்துல இட்லி பொங்கல் வடை பூரின்னு செஞ்சிகுடுத்துக்கிட்டு இருந்தான். அம்மா ஒத்தாசையோட. அப்புறம் சாப்பாடு செய்ய ஆரம்பிச்சி சின்ன சின்ன விசேசங்களுக்குச் சமைக்க ஆரம்பிச்சான். அப்புடியே வளந்து கல்யாணம் காதுகுத்து கெடாவெட்டுன்னு சமைக்க ஆரம்பிச்சி பெரிய ஆளா மாறிட்டான். கல்யாண சீசன்ல இவனோட சமையல் உறுதிப்படுத்திக்கிட்டு கல்யாணம் நாள் குறிக்கிற அளவுக்கு வளந்துட்டான்.. அவனோட அம்மா அவன் சம்பாரிக்கிறதைச் சிக்கனமா செலவுபண்ணி சேத்துவைச்சி மூத்தவனுக்கு சிக்கனமா கல்யாணம் முடிச்சா.

அப்புறம் கொஞ்சநாள்ல தான் இருந்த பூர்வீக வீட்ட இடிச்சிட்டு மச்சு வைச்சி வீடுகட்டினா.அப்புறம்சின்னமகனுக்கு நல்ல பெரிய எடமாப்பாத்துக் கல்யாணம் முடிச்சா.. வந்த மருமக மாமியாவமாதிரியே கெட்டி அஞ்சு வருசத்துல தனியா வாங்கிப் போட்டிருந்த பிளாட்டுல அஞ்சு செண்டுல பெரிய வீடு கட்டுனா. அதை எல்லார் கிட்டயும் சொல்லிச் சந்தோசப்பட்டா மாமியார்காரி..

நாந்தேன் குச்சு வீட்டுக்குள்ள குனிஞ்சி கெடந்தேன் மகனும் மருமகளும் மாளிகை மாதிரி வீட்டக்கட்டிப்புட்டாக..ன்னு பெருமையா பேசிட்டுக்கெடந்தாக. ஊருக்குள்ள இருக்குறவுக எல்லாம் சரி இனிமே சின்ன மகன்கூட மாளிகைக்குபோய்ட்டா இந்த பலகார யாவாரம் இங்குனக்குள்ளயே விட்டுட்டுப்போய்டுவியான்னு கேட்டப்ப சிரிச்சா. சின்ன மகன் தடபுடலா புதுவீட்டுக்குப்பால் காய்சினான்.. வந்தவுக எல்லாரும் பாராட்டினாக. மகன்னா இப்புடி இருக்கனும் சரிடா அம்மாவ இனிமே கஸ்ட்டபடவைக்காத இந்த வீடுல கூப்புட்டு வந்து மகாராணி மாதுரி வைச்சி கௌரவப்படுத்துன்னு சொன்னாக…

அவனும் ஆமா அது தான் செய்யபோறேன்னு சொன்னான். பூர்வீக வீட அண்ணனுக்குக்கே குடுத்துட்டு புதுவீட்டுக்குக்குடி போனான்.

அப்பத்தான் சொன்னமாதிரி அம்மாவ இனி நீ செரமப் படவேணாம். ஆயுசுக்கும் ஒழைச்சி ஓடாத் தேஞ்சு போயிட்ட கொறக் காலத்தை யாவது ஒக்காந்து சாப்புடு. என் வீட்டுக்கு வந்துரு நான் உன்னப்பாத்துக்கிவேன்னு சொன்னான்…அப்பத்தான் இந்த வாக்குவாதம் நடந்துச்சு…

சரிம்மா என்கூட அந்த புதுவீட்டுக்குக் கௌம்பு ம்மான்னு சொன்னான்.. அதுக்கு ஆத்தா சொல்லிச்சி நீ வளந்துட்ட. நல்லா வசதியும் ஆயிட்ட ஆனா ஒன் அண்ணனுக்கு வெவரம் பத்தாது. அவனத் தனியா விட்டா அவனால பொழைக்கமுடியாது. அவன் கூடயே இருந்து பழையபடி பலகாரம் சுட்டு அவனுக்கு வருமானம் குடுத்து அவனுக்கு ஒதவி செய்யலாம்னு இருக்கேன். நீ பாத்து நடந்துக்க… இங்க வசதிகெடையாது. செரமம் தான் ஆனா பழகிப்போச்சு, அவனுக்குத் தான் நான் தேவை நான் இல்லாம உன்னால சமாளிக்க முடியும் ஆனா அவனால முடியாது முடியாதவனத் தூக்கி விடுறதுதான் பெத்தவங்களோட வேலை எவ்வளவு கஸ்ட்டப்பட்டாலும் அதைத்தான் செய்வா ஒரு அம்மா.. தன்னோட வசதியப்பாக்க மாட்டா .. அதுனால என்ன என் இஸ்ட்டத்துக்கு விடுன்னா…

அதைக்கேட்டுக்கிட்டு இருந்த அந்த மூத்த மகன் கண்ணுல இருந்து கண்ணீர் ஊத்துச்சு அவனுக்குச் சரியா பேசவராது திக்கித்திக்கித்தான் பேசுவான் அவன் மெதுவாவந்து ஆத்தா கையப்புடிச்சி அழுதான் அது பாத்து அவ கண்ணும் தம்பிகாரன் கண்ணும் கலங்குச்சு….

அப்ப கண்ணீரோட தம்பி சொன்னான் அண்ணனுக்காக நானும் ஒன்னபிரிஞ்சி இருக்குறேன்… அப்ப அப்ப என் வீட்டுக்கும் வா ஆத்தா… நான் எதிர்பாத்துட்டே இருப்பேன்னு கண்ணதொடச்சிக்கிட்டு சொல்லிட்டுக் கௌம்புனான்… வெளியே போற மகன கண்ணீரோட பாத்துக்கிட்டு இருந்தா அந்த ஆத்தா…….

**அ.முத்துவிஜயன்**

# ஆயுதம் ஏந்தி போராடும் நிலையில் தற்பொழுது உள்ள இயக்கங்கள் இல்லை

### ஈ.பி.ஆர்.எல்.எப்.தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன் அவர்களுடனான நேர்காணல்

கடந்தவார தொடர்ச்சி...

இந்திய இராணுவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் யுத்தம் ஏற்பட்டது. நீண்ட யுத்தம் நடைபெற்றது. அழிவுகள் ஏற்பட்டன. இந்திய இராணுவம் 1990 இல் இலங்கையிலிருந்து இந்தியாவிற்கு சென்றுவிட்டது. அதன் பின்னர் இலங்கை அரசாங்கத்திற்கும் புலிகளுக்கும் இடையில் மிக நீண்ட யுத்தம் நடைபெற்றது. 2009 வரை அது நீடித்தது. எனவே நாங்கள் பார்த்தால் இந்திய இலங்கை ஒப்பந்தமும் முழுமையாக உள்ள ஒப்பந்தமும் நிறைவேற்றப்பட முடியவில்லை என்ற நிலவரம் இருந்தது. 1988 ஆம் ஆண்டு வட கிழக்கு இணைந்த மாகாணத்திற்கு ஒரு மாகாணசபை தேர்தல் நடைபெற்றது. வரதராஜாபெருமாள் தலைமையில் 1 அரை வருடம் ஒரு மாகாணசபை இயங்கியது. ஆனால் பிற்பாடு இந்திய இராணுவத்தினுடைய விலகலுடன் மாகாணசபையும் முடக்கப்பட்டது. அதுவும் இல்லாமல் போய்விட்டது. ஆகவே அதன் பின்னர் பார்த்தால் 2009 இன் பின்னர் கிழக்கு மாகாணத்தில் ஒரு தேர்தல் நடைபெற்றது. 2013 ஆம் ஆண்டு வடக்கு மாகாணத்தில் ஒரு தேர்தல் நடைபெற்றது வடக்கு கிழக்கு பிரிக்கப்பட்டது. இவ்வாறு பல சம்பவங்கள் நடைபெற்றது. எனவே தற்போதுள்ள விடயம் ஈழத்தமிழர்களின் பிரச்சனைகள் தீர்க்கப்படவில்லை. ஆனால் இந்தியாவினுடைய நிலைப்பாடு என்ன இந்திய இலங்கை ஒப்பந்தத்தை குறைந்தபட்சம் இலங்கை அரசாங்கம் நிறைவேற்ற வேண்டும் முதலாவதாக அதனை இலங்கை செய்ய வேண்டும் இந்திய இலங்கை ஒப்பந்தம் முழுமை இல்லாதுவிட்டாலும் சில சில விடயங்கள் இருக்கின்றன ஒரு பொலிஸ் துறையை உருவாக்குவதற்கு. அது ஒரு மாகாணத்திற்கு அதிகாரமுள்ளது ஆனால் அது நடைமுறையில் இல்லை முதலமைச்சரினுடைய ஒப்புதல் இல்லாது காணிகளை பங்கிட முடியாது. ஆனால் இலங்கை அரசாங்கம் அதனை நடைமுறைப்படுத்தவில்லை. இவ்வாறு பல விடயங்கள் அதாவது 13 வது திருத்தத்தில் உள்ள விடயங்கள் அப்படியே நிறைவேற்றப்பட வேண்டும் என இந்தியா தற்பொழுது கோரிக்கை வைக்கின்றது. ஆகவே முதல் கட்டமாக அது செய்யப்பட வேண்டும் என கேட்கின்றது. ஆனால் இலங்கை அரசாங்கம் அதனை செய்வதற்கு இதுவரை தயாராக இல்லை.

ஆகவே தமிழ் மக்களினுடைய பிரச்சனைகள் என்பது நிச்சயமாக தீர்க்கப்படாத பிரச்சனையாக இன்னும் இருக்கின்றது. ஆகவே இந்திய அரசாங்கம் இவை தொடர்பில் தமிழ் மக்கள் மத்தியில் மாறியிருக்கக்கூடிய சூழலில் தமிழ் தரப்பு அதாவது தமிழ் தேசிய தரப்பு என்று தற்பொழுது சொல்லுகின்றார்கள். அதில் இருக்கக்கூடியவர்கள் அதாவது இந்தியா என்ன செய்ய வேண்டும் இந்தியாவிடம் நாங்கள் என்ன கோரிக்கை வைக்கின்றோம் அதைப்பற்றி நாங்கள் திட்டவட்டமாக இந்தியத்தரப்புடன் இதுவரை யாரும் பேசவில்லை. இதுவரை பேசப்படுகின்றது எங்களுக்கு சமஸ்டி வேண்டும் என்று சொல்லப்படுகின்றது இல்லையென்றால் தமிழ் மக்கள் கஷ்டப்படுகின்றார்கள் துன்பப்படுகின்றார்கள் என்று சொல்லப்படுகின்றது இலங்கை அரசாங்கத்தினுடைய அடக்குமுறைகளைப் பற்றி பேசப்படுகின்றது. மாறிய சூழ்நிலையில் எங்களுக்கு இன்னென்ன விடயங்கள் நடந்தால் தான் அது இலங்கைக்கும் பாதுகாப்பு தமிழ் மக்களுக்கும் பாதுகாப்பு இந்தியாவிற்கும் பாதுகாப்பு என்ற நிலையில் விடயங்கள் இன்னும் அனுகப்படவில்லை என்று தான் நான் நம்புகின்றேன். ஏனென்றால் தமிழர் தரப்பு தன் மட்டத்தில் இவை பற்றி கலந்துரையாடுவதற்கு கூட தூர தூர நிற்கின்றார்கள்.

ஒன்றில் 2010 ஆம் ஆண்டுக்கு பின்னர் வந்த அரசியல்வாதிகள் தாங்கள் ஒவ்வொருவரும் கெட்டித்தனமான இராஜதந்திரிகளாக தங்களை காட்டிக்கொள்ள முயற்சிக்கின்றார்கள். இதற்காக 2010 ஆம் ஆண்டுக்கு முன்பாக பெரிய இராஜதந்திர ரீதியாக நாங்கள் செயற்பட்டு பல்வேறுபட்ட நாடுகள் எங்களுக்கு ஆதரவாக .ருந்தன என்றும் இல்லை. யுத்த காலத்தில் எங்களுக்கு ஆதரவாக யாரும் நின்றார்களா ஆதரவாக இருந்திருந்தால் சில வேளைகளில் யுத்தத்தை நிறுத்தியிருக்கலாம் அல்லது வேறு சம்பவங்கள் நடந்திருக்கலாம் அதுவும் இல்லை யுத்தத்திற்கு பின்னர் வந்த நாங்கள் தான் எல்லாம் என்று சொல்லக்கூடிய யாரும் பெரிய இராஜ தந்திரிகளாக மாற்றத்தை உருவாக்கக்கூடியவர்களாகவும் இருக்கவில்லை. ஆனால் அவர்கள் இந்திய அரசாங்கத்துடனோ ஏனையவர்களுடனோ ஒரு இராஜதந்திர ரீதியாக செயற்பட்டு 12 வருடங்கள் முடிந்திருக்கக்கூடிய நிலையில் ஒரு இஞ்சியேனும் நாங்கள் நகரவில்லை. ஏன் எங்களால் நகர முடியவில்லை. இதை யாராவது அலசி ஆராய்ந்தார்களா நாங்கள் வெட்டினோம் பிடுங்கினோம் என்று பேசுவதில் எதுவும் கிடையாது.

**கேள்வி : இதிலே தமிழ் கட்சிகளை தவிர்த்து ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப் போன்ற கட்சிகளுக்கு இந்தியாவுடனான நேரடித்தொடர்பு இருந்து கொண்டே இருந்தது போராட்ட ரீதியாகவும் இருந்தது அரசியல் ரீதியாகவும் இருந்தது. ஆனால் இதிலே இந்தியா தனது சுயநலத்திற்காக ஏதோ ஒரு வகையிலே இந்த போராளிகளை பயன்படுத்தியது. பயன்படுத்தி அதிலே ரஜீவ் காந்தியின் கொலையின் பின்னர் அதில் ஒரு தீவிர முயற்சி எடுத்துக்கொள்ள முடியாமல் இந்தியாவிற்கு போய்விட்டது ஒரு துரதிருஷ்டவசம். அதனை தொடர்ந்து பார்க்கின்ற பொழுது தற்பொழுது இருக்ககூடிய சூழ்நிலையில் ஆயுதம் தாங்கிய கட்சிகள் ஏதோவொரு வகையில் பிழையான வழிகளில் செல்கின்றார்கள் என்று கூறினாலும் கூட நீங்கள் தமிழ் மக்களினுடைய இனவிடுதலைக்காக வேண்டி ஆயுதம் ஏந்தி போராடினீர்கள். தற்பொழுது இந்த மூன்று இயக்கங்களும் இணைந்து ஏன் தமிழ் மக்களுக்கான ஒரு தீர்வை பெற்றுக்கொடுக்கும் நிலைக்கு நீங்கள் வரக்கூடாது?**



பதில் : முதலாவது விடயம் நீங்கள் கூறிய விடயத்தில் தற்பொழுதும் ஆயுதம் தரித்த என்ற தொணிகள் எல்லாம் பிழை. தற்பொழுது யாரிடமும் ஆயுதம் இல்லை. தற்பொழுது அவர்கள் தங்களை ஒரு பதியப்பட்ட அரசியல் கட்சியாக மாற்றி வைத்திருக்கின்றார்கள். இவர்கள் பாராளுமன்ற அரசியல் ஜனநாயக அரசியல் மூலம் தான் தாங்கள் என்னவும் செய்யலாம் என்ற நிலைப்பாட்டிற்கு வந்திருக்கின்றார்கள். இதில் ரெலோ புளொட் எல்லாம் தமிழரசுக் கட்சியுடன் இணைந்து தமிழ் தேசிய கூட்டமைப்பு என்ற பெயரில் தான் தொடர்ந்தும் இருந்து வருகின்றார்கள். ஆனால் அந்த காலத்திலிருந்து பார்த்தால் அவர்களுக்குள்ளும் நிறைய முரண்பாடுகள் இருக்கின்றது. அந்த முரண்பாடுகளை சீர் செய்யும் வகையில் கூட அவர்கள் இன்னும் இல்லை என்பது ஒரு விடயம்.

ஆனால் அதே சமயம் நீங்கள் கூறியது போன்று ஆயுதம் எடுத்த தரப்புக்களாவது குறைந்தபட்சம் ஒன்றாக வரலாம் என்று சொன்னால் வரலாம் ஆனால் அதற்கு அவர்கள் ஒன்றுபட வேண்டும். ஏனென்றால் அவர்கள் தற்பொழுது தமிழரசுக் கட்சியை விட்டு விலவி வருவதற்கு கூட அவர்கள் தயாராக இல்லை. அண்மையில் சித்தார்த்தன் கூட ஒரு பக்கத்தில் சுமந்திரனை காரசாரமாக விமர்சித்தாலும்கூட தமிழரசுக் கட்சி சம்மந்தனை விமர்சித்தாலும்கூட அவர் அதே சமயம் அதிலிருந்து தாங்கள் விலக மாட்டோம் என்று தெளிவாக கூறுகின்றார். ஆகவே நீங்கள் கூறுவது போன்று அவ்வாறானவர்கள் தமிழ் மக்களினுடைய நலன்களில் இருந்து நாங்கள் கூட்டாக போவது சிறப்பாகாது என்று சிந்திக்கக்கூடிய நிலைக்கு அவர்கள் வந்திருக்கின்றார்களா என்பது ஒரு கேள்வி. ஆகவே ரெலோ புளொட் போன்ற அமைப்புக்கள் தான் அதனை தீர்மானிக்க வேண்டும். 2017 ஆம் ஆண்டு அதற்கு முன்னர் நாங்களும் இதே கூட்டமைப்பில்தான் இருந்தோம். அதையொரு வலுவான அமைப்பாக மாற்ற வேண்டும் தமிழ் மக்களுக்கு பேரம் பேசக்கூடிய ஒரு அமைப்பாக மாற்ற வேண்டும் அது கொள்கைப் பற்றுடன் இருக்க வேண்டும் போன்ற அடிப்படையில் அதற்கான ஒரு அமைப்பை உருவாக்க வேண்டும் பதியப்பட வேண்டும் என்ற பல கோரிக்கைகளை நாங்கள் முன்வைத்தோம் அதனை யாரும் ஏற்றுக்கொள்ளவில்லை. அதனை தமிழரசுக்கட்சி ஏற்றுக்கொள்ளவில்லை ரெலோவோ புளொட்டோ அவர்கள் அதற்காக வாதாட தயாராக இருக்கவுமில்லை.

ஆகவே தொடர்ச்சியாக வெறுமனே நாங்கள் சத்தம் போடுபவர்களாக இருந்தோமே தவிர எதையும் முன்னெடுத்து செல்லமுடியவில்லை என்ற காரணத்தால் தான் 2017 ஆம் ஆண்டு நாங்களும் அதிலிருந்து விலக வேண்டி வந்தது. ஆகவே இன்றும் கூட எந்தவித மாற்றமும் இல்லாமல் தான் அந்த கூட்டமைப்பு நடந்துகொண்டிருக்கின்றது. தமிழ் மக்களினுடைய தேசிய இனப் பிரச்சனை இது வெறுமனே ஒரு பாராளுமன்ற அரசியல் அல்ல பாராளுமன்றம் என்பது தமிழ் மக்களினுடைய தேசிய இனப்பிரச்சனைக்கான ஒரு களமாக மாற்றப்பட வேண்டும் என எல்லாரும் எதிர்பார்க்கிறார்களே தவிர பாராளுமன்ற கதிரைகளுக்காகத்தான் இது என்பதல்ல.

தொடரும்...

இரணியன்

# விளையாட்டு செய்திகள்

## ஐ.பி.எல்.: பரபரப்பான போட்டியில் பெங்களூர் அணி இறுதிப் பந்தில் வெற்றி!

ஐ.பி.எல். ரி-20 தொடரின் 56ஆவது லீக் போட்டியில், றோயல் செலஞ்சர்ஸ் பெங்ளூர் அணி 7 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றுள்ளது. டுபாயில் நடை பெற்ற இப்போட்டியில், றோயல் செலஞ்சர்ஸ் பெங்ளூர் அணியும் டெல்லி கெபி டல்ஸ் அணியும் மோதின. இப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற றோயல் செலஞ்சர்ஸ் பெங்ளூர் அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய டெல்லி கெபிடல்ஸ் அணி, நிர்ணயிக்க ப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 164 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது. இதில் அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, பிரித்வீ ஷா 48 ஓட்டங்களையும் தாவன் 43 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

பெங்களூர் அணியின் பந்துவீச்சில், சிராஜ் 2 விக்கெட்டுகளையும் சஹால், ஹர்சல் பட்டேல் மற்றும் கிறிஸ்டியன் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர். இதனைத்தொடர்ந்து 165 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலு க்கு களமிறங்கிய றோயல் செலஞ் சர்ஸ் பெங்ளூர் அணி, போட்டியை பரபரப்பாக நகர்த்தி இறுதி பந்தில் வெற்றி இலக்கை கடந்தது. இதனால் பெங்களூர் அணி 7 விக்கெட்டுக ளால் வெற்றிபெற்றது.



இதன்போது அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, ஸ்ரீகர் பாரத் ஆட்டமி ழக்காது 78 ஓட்டங்களையும் க்ளென் மேக்ஸ்வெல் ஆட்டமிழக்காது 51 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். டெல்லி அணியின் பந்துவீச்சில், என்ரிச் நோட்ஜே 2 விக்கெட்டுகளையும் அக்ஸ ர் பட்டேல் 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர். இப்போட்டியின் ஆட்டநாயகனாக 52 பந்துகளில் 4 சிக்ஸர்கள் 3 பவுண்ரிகள் அடங்களாக ஆட்டமிழக்காது 78 ஓட்டங்களை பெற்றுக்கொண்ட ஸ்ரீகர் பாரத் தெரிவுசெய்யப்பட்டார்.

## அமெரிக்காஸ் கிராண்ட் பிரிக்ஸ்: மார்க் மார்க்கியுஸ் முதலிடம்!

மோட்டோ ஜிபி தொடரின் அமெரிக்காஸ் கிராண்ட் பிரிக்ஸ் பந்தயத்தில், நட ப்பு சம்பியனான ஹொன்டா அணியின் மார்க் மார்க்கியுஸ் முதலிடம் பிடித் துள்ளார்.

இளசுகளின் விருப்ப விளையாட்டாக இரசிக்கப்படும் மோட்டோ ஜிபி பந்தயம், ஆண்டுக்கு 19 சுற்றுகளாக பல்வேறு நாடுகளில் நடைபெறும். அந்த வகையி ல் ஆண்டின் 15ஆவது சுற்றான அமெரிக்காஸ் கிராண்ட் பிரிக்ஸ் பந்தயம், நேற்று அமெரிக்காஸ் சர்வதேச ஓடுதளத்தில் நடைபெற்றது.

இதில் பந்தய தூரத்தை நோக்கி, 21 வீரர்கள் மோட்டார் சைக்கிள்களில் சீறி பாய்ந்தனர். இதில், நடப்பு சம்பியனான ஹொன்டா அணியின் மார்க் மார்க் கியுஸ், பந்தய தூரத்தை 41 நிமிடங்கள், 41.435 வினாடிகளில் கடந்து முத லிடத்தை பிடித்தார்.

அத்தோடு முதலிடத்திற்கான 25 புள்ளிகளையும் அவர் பெற்றுக் கொண்டார். இதையடுத்து, யமஹா அணியின் ஃபேபியோ குவார்டாரோ, 4.679 வினா டிகள் பின்னிலையில் பந்தய தூரத்தை கடந்து இரண்டாவது இடத்தை பிடித்த தோடு, அதற்கான 20 புள்ளிகளையும் பெற்றுக்கொண்டார்.

இவரையடுத்து, டுக்கார்டி அணியின் பிரான்செஸ்கோ பாக்னியா, 8.547 வினாடிகள் பின்னிலையில் பந்தய தூரத்தை கடந்து மூன்றாவது இடத்தை பிடித்தார். அத்துடன் இதற்கான 16 புள்ளிகளையும் அவர் பெற்றுக்கொண் டார். இதுவரை நடந்து முடிந்துள்ள 15 சுற்றுப் போட்டிகளின் அடிப்படையில், யமஹா அணியின் ஃபேபியோ குவார்டாரோ ஐந்து வெற்றிகளுடன் 254 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளார்.

டுக்கார்டி அணியின் பிரான்செஸ்கோ பாக்னியா இரண்டு வெற்றிகளுடன் 202 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்தில் உள்ளார். சூசுக்கி அணியின் ஜோன் மிர், 175 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்தில் உள்ளார். பதின் ஆறாவது சுற்றான எமிலியா ரொமக்னா கிராண்ட் பிரிக்ஸ், எதிர்வரும் 24ஆம் திகதி மார்கோ சிமோன்செல்லி சர்வதேச ஓடுதளத்தில் நடைபெறவுள்ளது.

## உலகக்கிண்ண போட்டியை பார்வையிட இரசிகர்களுக்கு அனுமதி

ஓமான் மற்றும் ஐக்கிய அரபு இராச்சியத்தில் இடம்பெற உள்ள இருபதுக்கு 20 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரைப் பார்வையிடுவதற்கு இரசிகர்களு க்கு அனுமதி வழங்கப்படவுள்ளது. போட்டி இடம்பெறும் விளையாட்டரங் கின் மொத்த இருக்கை எண்ணிக்கையில் 70 சதவீதமானோருக்கு மாத்திரம் அனுமதி வழங்க சர்வதேச கிரிக்கெட் சபை தீர்மானித்துள்ளது. இதற்கிடை யில், இருபதுக்கு 20 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரின் 45 போட்டிகளுக் குமான பற்றுச்சீட்டுகள் விற்பனை செய்யும் நடவடிக்கைகள் தற்போது ஆரம்பி க்கப்பட்டுள்ளன.

எதிர்வரும் 17ஆம் திகதி ஓமானில் ஆரம்பமாகும் முதலாம் சுற்றுப் போட் டிகளுடன் துவங்கும் உலகக்கிண்ண கிரிக்கெட் தொடர் நவம்பர் 14 ஆம் திகதி நிறைவடையவுள்ளது. தகுதிகாண் முதலாம் சுற்றில் போட்டியிடவுள்ள இலங்கை அணி, எதிர்வரும் 18 ஆம் திகதி தமது முதல் போட்டியில் நமீபியா வை எதிர்கொள்ளவுள்ளது.

## உலகக்கிண்ண இலங்கை மகளிர் கிரிக்கெட் அணியில் 3 பாடசாலை மாணவிகள்

சிம்பாப்வேயில் நவம்பர் 21 ஆம் திகதி தொடங்கவுள்ள மகளிர் உலகக் கிண்ண தகுதிப் போட்டிக்கான இலங்கை மகளிர் அணியின் இறுதி 17 பேர் கொண்ட அணியில் கம்பாஹா, ரத்னாவலி பாலிகா வித்யாலயாலயத்தைச் சேர்ந்த 16 வயது விஷ்மி குணரத்ன எனும் இலங்கையின் இளைய மகளிர் கிரிக்கெட் வீராங்கனையாக அணியில் சேர்க்கப்பட்டுள்ளார். விஷ்மி, வேகப் பந்து வீச்சு சகலதுறை வீரர் மற்றும் பந்தின் சிறந்த பெட்டிங் ஆற்றலுடையவர், அவர் தனது பாடசாலையின் 19 வயதுக்குட்பட்ட அணியின் இளைய உறுப்பி னர்களில் ஒருவராக இருந்தார். மேலும் சீனிகம பெண்கள் கிரிக்கெட் கழகத் தின் வீராங்கனையாவார்.

இந்த ஆண்டின் தொடக்கத்தில் 15 வயதில் இளையவர் என்ற சாதனையை படைத்தார். சிலாவ் மரியன்ஸ் மகளிர் அணிக்கு எதிராக அவர் 117 பந்துக ளில் 112 ஓட்டங்கள் எடுத்தார். 3 இளைய உறுப்பினர்களில் இறுதி 16 இல் இன்னுமிரு பாடசாலை பெண்கள் பெயரிடப்பட்டுள்ளனர். தேவபதிராஜா வி த்யாலாயத்தின் ரத்கம இமேஷா துலானி மற்றும் சச்சினி நிசான்சாலா ஆகி யோர் அணியில் இடம் பெற்றுள்ளனர். இமேஷா ஒரு வலது கை ஆட்டக்கா ரர் மற்றும் சச்சினி ஒரு இடது கை சைன்மேன் பந்துவீச்சாளர் என்ற அரிய கண்டுபிடிப்பு எனலாம். அவர்கள் சீனிகம மகளிர் கிரிக்கெட் அணியின் குழு உறுப்பினர்களாக இருந்தனர். இலங்கை அணியின் தலைவியாக சாமரி அத்தபத்து பணியாற்றுகிறார்.சாமரிக்கு அறிமுகம் தேவையில்லை, ஏனெனில் அவர் தற்போதைய அணியின் தலைவர் மற்றும் அவுஸ்திரேலியாவில் வரவி ருக்கும் கேஎஃப்சி பிக் பாஷ் லீக்கின் ஒரு பகுதியாக இருக்கும் ஒரே இலங்கை யர் ஆவார்.

இறுதி 16 அணி

சாமரி அத்தப்பத்து (தலைவர்), ஹர்ஷிதா மாதவி (உதவி தலைவர்), இனோகா ரணவீரா, நிலாக்ஷி டி சில்வா,ஹாசினி பெரேரா, சுகந்திகா குமாரி, ஓஷாதி ரணசிங்கே, ஆமா காஞ்சனா, உதேஷிகா பிரபோதானி, அச்சினி குலசூரியா, அனுஷ்கா சஞ்சீவானி, கவிஷா தில்ஹாரி, தாரிகா செவ்வாண்டி, பிரசாதி வீரக்கொடி, இமேஷா துலானி, விஷ்மி குணரத்ன மற்றும் சச்சினி நிசன் சலா இலங்கை மகளிர் கிரிக்கெட்டின் தலைமைப் பயிற்சியாளராக முன்னாள் இலங்கை கிரிக்கெட் வீரர் ஹஷான் திலகரத்ன செயல்படுகின்றார். தகுதிச்சு ற்றில் முதல் 3 இடங்களை பிடிப்பவர்கள் நியூசிலாந்தில் நடைபெறும் மகளிர் ஒருநாள் உலகக் கிண்ணத்தில் விளையாடுவார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.





# உலக பார்வை



## தென் சீன கடலில் அமெரிக்க நீர்மூழ்கி கப்பல் விபத்து: 15 பேர் காயம்

அமெரிக்காவின் அணு ஆயுத நீர்மூழ்கி கப்பல், தெற்கு சீன கடல் பகுதியில் விபத்துக்குள்ளானதில் 15 படையினர் காயமடைந்துள்ளனர். USS Connecticut என்ற கப்பல் நீருக்கடியில் இருந்த அடையாளந்தெரியாத பொருளொன்றின் மீது மோதியுள்ளதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ள னர். தாய்வானின் பாதுகாப்பு மண்டலத்தில் சீனப்போர் விமானங்கள் நுழைந்ததாக ஏற்கனவே பதற்றம் ஏற்பட்டுள்ள சூழலில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

USS Connecticut நீர்மூழ்கி கப்பல் தற்போது அமெரிக்கப் பிராந்தியமான குவாம் பிரதேசத்தை நோக்கிப் பயணிப்பதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். தென் சீன கடல் பகுதி சர்வதேச ரீதியில் சர்ச்சைக்குரிய பகுதிகளில் ஒன்றாக உள்ளதென சர்வதேச ஊடகங்கள் சுட்டிக்காட்டியுள்ளன. குறித்த பெரும்பாலான பகுதி தமக்கு உரித்தானது என சீனா உரிமை கோருகின்று.

## ஆப்கான் மாநாட்டுக்கு தலிபான்களை அழைக்க ரஷ்யா முடிவு!

ஆப்கானிஸ்தான் மாநாட்டில் பங்கேற்க தலிபான்களுக்கு அழைப்பு விடுக்கப்படும் என ஆப்கானிஸ்தானுக்கான ரஷ்யத் தூதர் ஸமீர் காபுலோவ் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில், 'பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள ஆப்கானிஸ்தானுக்கு நிவாரணப் பொருட்களை எவ்வாறு அளிப்பது என்பது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருகின்றது' என கூறினார்.

ஆப்கான் விவகாரம் குறித்து ஆலோசனை நடத்துவதற்காக பாகிஸ்தான், ஈரான், இந்தியா, சீனா ஆகிய நாடுகள் பங்கேற்கும் சர்வதேச மாநாடு மாஸ்கோவில் எதிர்வரும் 20ஆம் திகதி நடைபெறவுள்ளது. ஆப்கானிஸ்தானை தலிபான்கள் கைப்பற்றியதைத் தொடர்ந்து, அங்கு ஏற்பட்டுள்ள பொருளாதார மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் பற்றாக்குறை நெருக்கடி தொடர்பாக விவாதிப்பதற்காக ஜி-20 நாடுகளின் மாநாடு எதிர்வரும் 12ஆம் திகதி நடைபெறவிருக்கிறது. அந்த மாநாட்டின் தொடர்ச்சியாக, மாஸ்கோவில் ஆப்கான் மாநாடு நடைபெறவிருக்கிறது.

ஆப்கானிஸ்தானை தலிபான்கள் கைப்பற்றியதைத் தொடர்ந்து, மேற்கத்திய நாடுகள் தங்களது தூதரக அதிகாரிகளை அவசர அவசரமாக திரும்ப அழைத்துக் கொண்ட போதும், காபூலில் ரஷ்யத் தூதரகம் வழக்கம் போல் தொடர்ந்து இயங்கி வருகிறது ஆப்கானிஸ்தானில் தலிபான்களின் ஆட்சியை ரஷ்யா ஏற்றுக் கொண்டாலும், அந்த ஆட்சிக்கு அதிகாரப்பூர்வ அங்கீகாரம் அளிக்காமல் உள்ளது.

கடந்த 1980-களில் ஆப்கானிஸ்தானை சோவியத் ஒன்றியத் ஆக்கிரமித்ததைத் தொடர்ந்து நடைபெற்ற போரில் 20 இலட்சம் ஆப்கானியர்கள் உயிரிழந்தனர் 70 லட்சம் பேர் தங்கள் வீடுகளிலிருந்து வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டது. இந்தப் போரில் 14,000 சோவியத் ஒன்றிய வீரர்களும் உயிரிழந்தனர்.

## ஆபிரிக்க சிறுவர்களுக்கு உலகில் முதன்முறையாக மலேரியா தடுப்பூசி செலுத்தப்படவுள்ளது

உலகில் முதன்முறையாக சிறுவர்களுக்கு மலேரியா தடுப்பூசி செலுத்தப்படவுள்ளது. மலேரியா காய்ச்சலை தடுப்பதற்காகத் தயாரிக்கப்பட்ட தடுப்பூசியினை 2019 ஆம் ஆண்டு கானா, கென்யா.

மலாவி ஆகிய நாடுகளில் அதன் செயல்திறன் குறித்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அதன் பெறுபேற்றின் அடிப்படையில் மொஸ்க்ரியுக்ஸ் (Mosquirix) என்ற மலேரியா தடுப்பூசியைப் பயன்படுத்துவதற்கு உலக சுதாகார ஸ்தாபனம் அனுமதியளித்துள்ளது.

இந்தத் தடுப்பூசியானது ஆபிரிக்க சிறுவர்களுக்கு, உலகில் முதன்முறையாக செலுத்தப்படவுள்ளது. இது வரலாற்றுச் சிறப்புமிக்க தருணம் என உலக சுகாதார ஸ்தாபனத்தின் தலைவர் டெட்ரொஸ் அதனோம் கேப்ரியஸஸ் (Tedros Adhanom Ghebreyesus) தெரிவித்துள்ளார்.

மலேரியா காய்ச்சல் காரணமாக 2019 ஆம் ஆண்டு ஆபிரிக்காவில் 260,000 சிறுவர்கள் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

## பிரித்தானியாவில் தினசரி இறைச்சி நுகர்வு 17 சதவீதம் குறைந்துள்ளது

கடந்த தசாப்தத்தில் பிரித்தானியாவில் தினசரி இறைச்சி நுகர்வு 17 சதவீதம் குறைந்துள்ளது என்று ஒரு ஆய்வு காட்டுகிறது.

விஞ்ஞானிகளின் கூற்றுப்படி, அந்த குறைப்பு ஒரு முக்கிய தேசிய இலக்கை அடைய போதுமானதாக இல்லை. நமது உணவின் சுற்றுச்சூழல் தாக்கத்தை குறைப்பதே இதன் நோக்கம்.

தேசிய உணவு மூலோபாயத்தால் நிர்ணயிக்கப்பட்ட இந்த குறிக்கோள், முழு பிரித்தானியாவின் உணவு முறையின் மதிப்பாய்வை அடிப்படையாகக் கொண்டது . விவசாயம் மற்றும் உற்பத்தி முதல் பசி மற்றும் நிலைத்தன்மை வரை.

இது, அடுத்த 10 ஆண்டுகளில் பிரித்தானியாவில் இறைச்சி நுகர்வு 30 சதவீதம் குறைய பரிந்துரைக்கிறது.

லான்செட் பிளானட்டரி ஹெல்த் இதழில் வெளியிடப்பட்ட புதிய ஆய்வு, 'ஒரு தசாப்தத்திற்கு முன்பு பெரும்பாலான மக்கள் குறைவான சிவப்பு மற்றும் பதப்படுத்தப்பட்ட இறைச்சியை எடுத்துக்கொண்டனர். ஆனால் அவர்கள் தற்போது அதிக வெள்ளை இறைச்சியை சாப்பிடுவதாக தெரியவந்துள்ளது' என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிவப்பு மற்றும் பதப்படுத்தப்பட்ட இறைச்சியின் அதிக நுகர்வு இருதய நோய், வகை 2 நீரிழிவு மற்றும் சில புற்றுநோய்கள் உள்ளிட்ட உடல்நலப் பிரச்சினைகளின் அபாயத்தை அதிகரிக்கும்.

## சிவப்பு பட்டியலில் உள்ள நாடுகளின் எண்ணிக்கையை குறைக்க பிரித்தானியா தீர்மானம்

பிரித்தானியாவின் கொவிட்-19 பயண சிவப்பு பட்டியலில் உள்ள நாடுகளின் எண்ணிக்கையை, 54 இலிருந்து ஏழாக குறைக்கவுள்ளதாக அந்நாட்டு அரசாங்கம் அறிவித்துள்ளது.

இந்த மாற்றங்கள் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் அமுலாகும் என பிரித்தானிய போக்குவரத்து செயலாளர் க்ராண்ட் ஷாப்ஸ் (Grant Shapps ) தெரிவித்துள்ளார்.

தென்னாபிரிக்கா, பிரேஸில், மெக்ஸிகோ உள்ளிட்ட 47 நாடுகள் சிவப்பு பட்டியலில் இருந்து விடுவிக்கப்படவுள்ளன.

பனாமா, கொலம்பியா, வெனிசுவெலா, பெரு, ஈக்குவடோர், ஹெய்ட்டி மற்றும் டொமினிக்கன் குடியரசு முதலான ஏழு நாடுகள் பிரித்தானியாவின் கொவிட்-19 பயண சிவப்பு பட்டியலில் தொடர்ந்தும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வெளிநாட்டு பயணிகளுக்கான தடையை நீக்குகிறது இந்தியா

ஒன்றரை ஆண்டுகளுக்குப் பின்னர், எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு இந்தியா அனுமதியளிக்க உள்ளது.

கொவிட்-19 பரவல் காரணமாக, கடந்த ஆண்டு மார்ச் மாதம் முதல், கடுமையான கட்டுப்பாடுகளை இந்தியா அமுலாக்கியது.

இந்நிலையில், தொற்றாளர்கள் மற்றும் மரணங்களின் எண்ணிக்கை குறைவடைந்தமை, தடுப்பூசி ஏற்றல் நடவடிக்கை போன்ற காரணங்களால் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை நாட்டுக்குள் அனுமதிக்க பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

ஆசியாவின் மூன்றாவது மிகப்பெரிய பொருளாதாரத்தைக் கொண்டுள்ள இந்தியாவின் பிரதான அந்நிய செலாவணி வருமானம் சுற்றுலாத்துறையாகும்.

2019 ஆம் ஆண்டு, இந்தியாவுக்கு ஒரு கோடியே 30 ஆயிரம் சுற்றுலாப் பயணிகள் வந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சாகார பாலைவனம்

இது ஆப்பிரிக்கா கண்டத்தில் அமைந்துள்ளது. வட அகலாங்கு 23 பாகைக்கும் கிழக்கு நெட்டாங்கு 13 பாகைக்கும் இடையில் அமைந்துள்ளது. இது உலகிலேயே மிக பெரிய பாலைவனமாக காணப்படுகின்றது. இதன் நீளம் 480 கிலோமீட்டர் ஆகவும் அகலம் 1800 கிலோமீட்டர் ஆகவும் காணப்படுகின்றது. இதன் பரப்பு 9200000 சதுர கிலோ மீட்டர் ஆகும். இது ஆபிரிக்கா கண்டத்தில் 31% இனை கொண்டு காணப்படுகின்றது. இப்பாலைவனம் 2.5 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றியதாக கூறப்படுகின்றது.

சகாரா பாலைவனம் 20% மணலினால் மூடப்பட்டுள்ளது. இப்பாலை வனத்தின் வடக்கே மத்தியதரை கடல், எகிப்து ஆகியனவும் கிழக்கே செங்கடலும், மேற்கே அத்திலாந்திக் சமுத்திரத்தினையும் தெற்கே நைகர் நதி சவானா புல்நிலம் ஆகியவற்றினையும் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. சகாரா பாலைவனத்தில் உள்ள நாடுகளாக அல்ஜீரியா , எகிப்து, லிபியா, சாட், மாலி, மௌரிட்டானியா, மொராக்கோ, நைகர், சூடான், துனிசியா ஆகியன காணப்படுகின்றன. இங்குள்ள மலைகளாக Air mountains,Ahagger mountains,Sharan atlas, Tibesti mountains, Adrar des inforas, Red sea hills ஆகியன காணப்படுகின்றன.

இப்பாலைவனத்தின் காலநிலை பற்றி அவதானிக்குமிடத்து இங்கு மொன்சூன் காலநிலை காணப்படுகின்றது. அத்துடன் வருடத்தில் 3600 மணித்தியாலம் சூரியன் உதிக்கும். இதன் கிழக்கு பகுதியில் வருடத்தில் 4000 மணி த்தியாலம் சூரியன் உதிக்கும். மற்றும் இங்கு உயர் வெப்பநிலை 38-40 செல்ஸியஸ் ஆக காணப்படுகின்றது. சில நேரங்களில் 47 செல்ஸியஸ் வெப்பநிலையும் காணப்படும். குறிப்பாக ஜூன் மாதத்தில் 43 செல்ஸியஸ் உம், ஜூலை மாதத்தில் 46 செல்ஸியஸ், ஆகஸ்ட் மாதத்தில் 45 செல்ஸியஸ் உம், செப்டம்பர் மாதத்தில் 41 செல்ஸியஸ் உம் வெப்பநிலை காணப்படுகின்றது.

இங்குள்ள மழைவீழ்ச்சி பற்றி அவதானிக்குமிடத்து அல்ஜிரியா, மொராக்கோ ஆகியவற்றில் 100- 250 மில்லிமீட்டர் மழை கிடைக்கப்பெறுகின்றது. மற்றும் சகாராவில் 2800000 சதுரகிலோமீட்டர் பரப்பளவில் 10 மில்லிமீட்டருக்கும் குறைவான மழையும், 1500000 சதுரகிலோமீட்டர் பரப்பளவில் 5 மில்லிமீட்டர் குறைவான மழையும் கிடைக்கி ன்றது.

சகாரா பாலைவனத்தில் Acacia tree, Palm, Succulent, Spiry shrubs, Grasses ஆகிய தாவரங்கள் அதிக ளவில் காணப்படுகின்றன. மற்றும் Fennec fox, Pale fox, Ruppell fox, Addax fox ஆகிய நரி வகைகள் காணப்படுகின்றன. இங்கு மக்களால் வளர்க்கப்படும் மிருகங்களாக ஒட்டகம், ஆடுகள் ஆகியன காணபடுகின்றன. இவற்றின் மூலம் பால், பொதி சுமத்தல், இடங்களுக்கு செல்லுதல் போறவற்றினை செய்கின்றனர். இதுதவிர 70 வகையான முலையூட்டிகள், 90 வகையான Avin specias, 100 வகையான ஊர்வனவும், சிலந்திகளும் காணப்படுகின்றன.

இங்குள்ள ஊர்வனவில் முக்கியமானவையாக பாம்புகள், பல்லிகள், முதலைகள் ஆகியன காணப்படுகின்றன. அத்துடன் பலஸ்தீன மஞ்சள் தேள் இங்கு உண்டு. இதன் நீளம் 10 சென்றிமீட்டர் ஆகும். இது மிக நச்சு தன்மை கொண்டது. மற்றும் அடாச்சு எனப்படும் பெரிய வெண்ணிற இராலை உண்டு. இது நீண்டகாலம் நீர் இன்றி வாழும் தன்மை கொண்டது. அல்ஜீரியா, நோகோ, நைகர், மாலி ஆகிய பகுதிகளில் சிறுத்தைகள் வாழ்கின்றன. இதுமட்டுமில்லாது இங்கு வெள்ளி எறும்பு காணப்படுகின்றது. இது பூமிக்கடியில் குழிகளில் வாழும். இவை ஒரு மணிநேரத்துக்கு ஒருமுறை வெளியே வரும். இவ்வாறு வெளிவரும் சந்தர்ப்பத்தில் அவை இறக்கநேரிடும்.



இப்பத்திரிகை இலக்கம் 154ஏ, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 10.10.2021 அன்று வெளியிடப்பட்டது.